Registered as a News Paper in Sri lanka

விலை : ரூ.

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 15 வெள்ளிக்கிழமை (31.07.2015) பக்கங்கள் 20 ஓசை - 303

நாடாளுமன்றத் தேர்தல் - 2015



ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி



# சமஷ்டி வெறும் ஏமாற்று வித்தை

## சாடுகிறார் கஜேந்திரகுமார்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் காலத்தில் மட்டும் சமஷ்டி, தீம்பு எனப்பேசி தமிழ் மக்களை முட்டாள்களாக்குகின்றனர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர். 5 ஆண்டுகளாக பேசாதவர்கள் இப்போது எங்கிருந்து வந்தார்கள் என கேள்வி எழுப்பினார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒற்றையாட்சிக்குள்ளேதான் தீர்வு என தென்னிலங்கை கட்சிகள் கூறும் நிலையில் சமஷ்டி, திம்பு என கூட்டமைப்பினர் தெரிவிப்பது கேலியான விடயம். இவர்கள் மக்களை முட்டாளாக்குகின்றனர். முன்னர் மகிந்தவை ஆட்சிப் பீடத்தில் இருந்து இறக்க மைத்திரியையும், ரணிலையும் சந்திரக்காவையும், நல்லவர்கள் என நிபந்தனை இன்றி ஆதரித்தனர். ஆனால் தேர்தலின்போது மைத்திரி, தான் போரில் வெற்றி கொண்டதாக கூறித்தான் வெற்றி பெற்றார்.

ஆட்சி மாற்றம் என்றார்கள். ஆனால் ஆள்மாற்றம்தான் நடந்திருக்கிறது. மைத்திரியையும் மகிந்தவும் ஒன்றுதான். தமிழ் மக்களுக்கு இதனால் ஒன்றும் கிடைக்கவில்லை. தமிழ் மக்களின் வாக்குகளால்தான் (19) ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவுக்கான தூதுவர் நியமனம்

(கொழும்பு)

இந்தியாவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக எசல வீரக்கோன் நியமிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், 33 நாடுகளுக்கான தூதுவர்களைத் திருப்பி அழைத்துள்ளதுடன், அவர்களுக்குப் பதிலாக புதியவர்களை நியமித்து வருகிறது.

இந்த நிலையில், புதுடெல்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் பேராசிரியர் சுதர்சன் செனி (19) ஆம் பக்கம் பார்க்க

## ரூபவாஹினி தலைவர் இராஜினாமா

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனதின் தலைவர் சோமரத்ன திசாநாயக்க தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

நிகழ்கால அரசியல் மற்றும் பிரத்தியேக காரணங்களை முன்னிட்டு மேற்படி பதவியை ராஜினாமா செய்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அமுலாகும் விதத்திலேயே இவரது ராஜினாமாக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

## இன நல்லிணக்கமே நிரந்தர அமைதியைத்தரும்

### மக்கள் சந்திப்பில் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவத்ன் ஊடாகவே இந்நாட்டில் நீண்டகாலமாக புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வினைக்காண முடியுமென்பதுடன் அதுவே எமது நிலைப்பாடாகுமென்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஊரெழு சர்வசக்தி சனசமூக நிலையத்தில் அப்பகுதி மக்கள் மத்தியில் கடந்த புதன்கிழமை தேர்தல் பரப்புரையில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (19) ஆம் பக்கம் பார்க்க

## ஜே.வி.பி. வேட்பாளர் நேற்று கைது

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி சார்பாக, எதிர்வரும் பொதுத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் சமந்த கோரலா (19) ஆம் பக்கம் பார்க்க

## உள்ளக விசாரணை இப்போதைக்கு இல்லை

### அரசு திட்டவட்டம்

(கொழும்பு)

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்வரை எந்தவித உள்ளகப் பொறிமுறையும் முன்னெடுக்கப்படமாட்டாதென அரசாங்கம் (19) ஆம் பக்கம் பார்க்க

## இலவச மின் இணைப்பு மீள் குடியேறியோருக்கு

### வடக்கு, கிழக்கில் அமுல்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் மீள் குடியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை நடைமுறைபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வடக்கு கிழக்கில் இடம்பெற்ற ஆயுதப்போராட்டம் காரணமாக இடம்பெயர்ந்த சகல குடும்பங்களையும் மீள் குடியேற்றுவதற்கு அரசாங்கம் தொடர்ச்சியாக முயற்சி எடுத்து வருகின்றது.

இதனைச் செயற்படுத்தும் போது பலவேறு (19) ஆம் பக்கம் பார்க்க

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



டக்ளஸ் தேவானந்தா

உங்களோடு உங்களுக்காக நாங்கள்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)




நீர்வேலி வாய்க்காற்தரவை முத்தவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றபோது.... (85)

## கிட்ஸ்பார்க் முன்பள்ளியின் விளையாட்டு விழா

(யாழ். நிருபர்)

காரை. கிட்ஸ் பார்க் சிறுவர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் காலை 9.00 மணிக்கு காரை. கிட்ஸ் பார்க் விளையாட்டு மைதானத்தில் நடைபெற வுள்ளது.

ஓய்வு நிலை அதிபர் பண்டிதர் மு.சு. வேலாயுத பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ் வில் பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச வைத் தியசாலையின் வைத்தியப் பொறுப்பதிகாரி கே. இந்திர மோகன், சிறப்பு விருந்தின ராக முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளரும், காரை. அபிவிருத்திச் சபை யின் தலைவருமான ப. விக் னேஸ்வரன், கௌரவவிருந் தினராக ஓய்வு நிலை வல யக் கல்விப் பணிப்பாளர் ஜி. இராதாகிருஷ்ணன் ஆகி யோர் கலந்து கொள்ளவுள் ளனர். (10)

# தனி நாடு கோரி ஏமாற்றும் கூட்டமைப்பு மக்கள் சேவைகளை முன்னெடுக்கவில்லை

### தம்பாலை மக்கள் விசனம்



(தம்பாலை)

ஆட்சி மாற்றத்தின் ஊடாக பல்வேறுபட்ட வசதி வாய்ப்புக் களை பெற்றுத் தருவோம் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வாக்குறுதி களை நம்பி வாக்களித்திருந்த போதிலும் நாம் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டே வருகின்றோம் என அச்சுவேலி தம்பாலை மக்கள் விசனம் தெரிவித்துள் ளனர்.

கோப்பாய் தேர்தல் தொகுதி யில் அச்சுவேலி தம்பாலை பகுதியில் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட் பாளருமான டக்ளஸ் தேவா னந்தாவால் அண்மையில் முன் னெடுக்கப்பட்ட தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் இவ்வாறு தெரிவித் துள்ளனர்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஆட்சி மாற்றத்தின் ஊடாகவே தமிழ் மக்களுக்கு பல்வேறுபட்ட நலன்சார் செயற்றிட்டங்களை முன்னெடுக்க முடியுமென வாக்குறுதிகளை வழங்கியி ருந்தனர்.

அவ்வாக்குறுதிகளை நம்பி நாம் ஆட்சி மாற்றத்துக்காக வாக்களித்து ஆட்சி மாற்றத்தை கொண்டு வந்தபோதிலும் இதுவரையில் எமக்காக எவ்வித மான நன்மைகளும் கிடைக்கப் பெறவில்லை.

நல்லாட்சி மலர்ந்துள்ளதாக கூறும் கூட்டமைப்பினரும் அவர்கள் சார்ந்தவர்களும் மக் களாகிய எம்மை தொடர்ச்சியாக ஏமாற்றி வருவதையே தமது இலக்காகக் கொண்டு இற்றை வரை செயற்பட்டு வருகின்ற னர்.

இந்நிலையில் நடைபெற வுள்ள நாடாளுமன்றத்தேர்தலில் மக்களுடன் நின்று மக்களுக்காக சேவைபுரியும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரை பெற்றி பெற வைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகவும் அவசியமாகவும் அமைந்துள் ளது.

வளமானதொரு எதிர் காலத்தை முன்னோக்கியதான கொள்கைத்திட்டமும். செயற் றிட்டங்களும் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியினருக்கு மட்டுமே உள்ளது என்பதை நாம் நன்கு விளங்கிக் கொண்டுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தனிநாடு என்று கூறிக் கொள்ளும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பினர் மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றும் கைங் கரியங்களில் ஈடுபட்டு வரும் அதேவேளை, எமக்காக கிடைக்கப் பெறும் வாய்ப்பு களையும் உரிய முறையில் பயன்படுத்தவில்லையென்றும் சுட்டிக்காட்டினர்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட் பாளர்களான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), ஐங்கரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## அமர்வுகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக் கல் லூரியில் இது வரை காலமும் நடைபெற்று வந்த யாழ்ப்பாண மத்தியஸ்தர் சபை அமர்வுகள் நாளை முதல் செப்ரெம்பர் 9ஆம் திகதி வரை உயர் தரப் பரீட்சை காரணமாக யாழ். நாவாந்துறை றோமன் கத் தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 16ஆம் திகதி இப்பாடசாலை தேர்தல் வாக்களிப்பு நிலைய மாக செயற்படுவதையிட்டு அன் றைய ஞாயிற்றுக் கிழமை அமர்வு நடைபெறமாட்டாது என வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். தாவடி இந்துவின் ஆண்டு நிறைவு விழா

(தாவடி)

யாழ். தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் 140 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை பாடசாலை மைதானத் தில் அமைந்துள்ள தாவடி பரமு வைத்தியர் அரங்கில் பாட சாலை அதிபர் நா. தனபால சிங்கம் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இரு நாள் நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந் தினராக வடமாகாண, கல்வி விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செய லாளர் நா. தனபாலசிங்கம், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ. சந்திரராஜா, கௌரவவிருந் தினர்களாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த. சண்முக குலகுமாரன், பழைய மாண வரான ஓய்வுபெற்ற பொறியிய லாளர் மு. சந்திரசேகரன் ஆகி யோர் கலந்து கொள்ளவுள் ளனர். (அ)

## பிரார்த்தனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

"குரு பூர்ணிமா சத்சங்கம்" பிரார்த்தனை நிகழ்வு உரும் பிராய் சந்தியில் அமைந்துள்ள இராம கிருஷ்ண மிஷன் நலன் புரி நிலையத்தில் நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வ ரூபானந்தாவின் தலைமையில் இடம்பெறவுள்ள இப்பிரார்த் தனை நிகழ்வில் தீபாரதனை, தியானம், பஜனை மற்றும் ஆன் மீக அறிவுரைகளும் இடம்பெற வுள்ளதென நிலையத்தின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சி. சிவ மோகன் தெரிவித்துள்ளார். (அ)

# சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேக நபர் தலைமறைவு

(முள்ளியவளை)

முள்ளியவளை மாமூலை பகுதியில் வீட்டில் இருந்த 8 வயது சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கிய 55 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

குறித்த சிறுமியை குளவிக்கூடு காட்டுவதாகக் கூறி அழைத்துச் சென்றே சந்தேக நபர் சிறுமியை துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கிய தாகத். தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சிறுமி இம்மாதம் 27ஆம் திகதி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிய வருகின்றது.


இதனையடுத்து சிறுமியின் தாயார் மறுநாள் 28ஆம் திகதி முள்ளியவளை பொலிஸாரிடம் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

இச்சம்பவத்துடன் தேடப்பட்டு வரும் சந்தேக நபர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (125)

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
தேர்தல் மாவட்டம் - வன்னி

அன்ரனி அருள்ராஜசேகர்
(சாந்தன்)
மாவட்ட இணைப்பாளர் வவுனியா

X
1
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)



புதுக்குடியிருப்பு "மல்லிகைத்தீவு" பகுதியில் அண்மையில் இடம்பெற்ற "இது கூத்தல்ல நிஜம்" நாடக ஆற்றுகையின் போது... (ப)

# போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் மேல் நீதிமன்றம் தலையீடு செய்யமாட்டாது

## நீதிபதி இளஞ்செழியன் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சமூக நலன்களுக்கு விரோதமாக கலாசார சீரழிவை ஏற்படுத்தும் வகையில் அதிகரித்துள்ள போதைப்பொருளை அடியோடு இல்லாமல் ஒழிப்பதற்காக யாழ்.குடாநாட்டு மாவட்ட நீதிபதிகள் எடுக்கும் நடவடிக்கைகளில் அநாவசியமாக மேல் நீதிமன்றம் தலையீடு செய்ய் மாட்டாது என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் அறிவித்துள்ளார்.

பெருந்தொகையான 26 கிலோ மற்றும் 141 கிலோ அளவிலான கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தமைக்காக, இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரண்டு நபர்கள் தொடர்பாக மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு பிணை மனுக்கள் தொடர்பான விசாரணைகளின்போதே அவர் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

தனது உடைமையில் 26 கிலோ கஞ்சாவை வைத்திருந்தமைக்காக கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தின் கட்டளையின்பேரில் நபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அதேபோன்று 141 கிலோ கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தமைக்காக ஒகைது செய்யப்பட்ட மற்றுமொரு நபர் பருத்தித்துறை நீதவானின் கட்டளைக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். போதைப் பொருள கட்டளைச் சட்டத்தின் 83 ஆம் பிரிவின் கீழ் போதைப் பொருள சம்பந்தப்பட்ட வழக்கிற்கு மேல் நீதிமன்றில் மட்டுமே பிணை மனுத் தாக்கல் செய்ய முடியும் என்பதன் அடிப்படையில் இந்த இரண்டு நபர்களுக்கும் பிணை வழங்க வேண்டும் என கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் இரண்டு வெவவேறு பிணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த பிணை மனுக்கள் தொடர்பான விசாரணைகள், நேற்றுமுன்தினம் நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்றன. இந்த பிணை மனுக்களுக்கு ஆட்சேபனை தெரிவிப்பதாகக் கூறிய அரச சட்டத்தரணி, தனது ஆட்சேபனையை மனு ஒன்றின் ஊடாக நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அவகாசம் கோரி, தவணை ஒன்றைத் தருமாறு கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து, இந்த பிணை மனுக்கள் போதைப் பொருளுடன் சம்பந்தப்பட்டவை என்பதுடன், இரண்டு வழக்குகளிலும் கைப்பற்றப்பட்டுள்ள கஞ்சா போதைப் பொருளின் அளவு பிரமாணம் மிக அதிகமானதாகும் என நீதிபதி இளஞ்சசெழியன் சுட்டிக்காட்டி அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த இரண்டு வழக்குகளிலும் புரியப்பட்டுள்ள குற்றம் பாரதூரமானது. இத்தகைய குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு மேல் நீதிமன்றத்தினால் மட்டுமே பிணை வழங்க முடியும் என்று சட்டம் பரிந்துரை செய்கின்றது. ஆனால், யாழ் குடாநாட்டில் போதைப்பொருளை அடியோடு அழிப்பதற்கு யாழ் குடாநாட்டு மாவட்ட நீதவான்கள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள். பொலிஸார் துப்பறிந்து பொதுமக்கள் வழங்கும் தகவல்களுடன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருப்பவர்களைக் கைது செய்கின்றார்கள். அவ்வாறு கைது செய்யப்படுபவர்களை மாவட்ட நீதவான்கள் விளக்கமறியலில் வைத்து சட்ட நடவடிக்கை மேற்கொள்கின்றார்கள். அதனால், பாரதூரமான குற்றச்செயல்களான கஞ்சா போதைப் பொருள வழக்குகளுக்கு மேல் நீதிமன்றம் பிணை வழங்கி மாவட்ட நீதிமன்றங்களின் செயற்பாடுகளுக்கு இடைஞ்சல் விளைவிக்கக் கூடாது.

போதைப்பொருட்களை இல்லாமல் செய்வதற்காக மாவட்ட நீதிமன்றங்கள் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு மேல் நீதிமன்றம் உதவியாகவும் உடந்தையாகவும் இருக்க வேண்டுமேயொழிய, உபத்திரமாக இருக்கக் கூடாது.

போதைப்பொருளாகிய கஞ்சா கடத்துதலும், உடைமையில் வைத்திருப்பதுவும், பாரதூரமான சமூகவிரோதக் குற்றச் செயலாகும்.

மாணவர்கள், இளைஞர்களின் எதிர்கால வாழ்க்கையை நாசப்படுத்துகின்ற குற்றச் செயலுமாகும். எனவே, இக்குற்றங்களுக்கு இலகுவில் பிணை வழங்க முடியாது. பிணை மனுக்களை விரைவாக விசாரணை செய்யவும் முடியாது என தெரிவித்தார்.

அத்துடன், இந்த இரண்டு பிணை மனுக்களுக்கும் எதிராக ஆட்சேபனை மனுத் தாக்கல் செய்ய அரச சட்டத்தரணி செய்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு இந்த மனுக்கள் மீதான விசாரணைகளை செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

# கடற்பாதை சேதம் பயணிகள் சிரமம்

ஊர்காவற்றுறை காரைநகர் ஆகிய இரு இறங்குதுறைகளுக்கிடையில் சேவையாற்றிவருகின்ற (பரி) பாதை சேவையானது அடிக்கடி பழுதடைந்து சேவையாற்ற மறுத்து வருவதால் இந்த பரி (பாதை) சேவையானது கடந்த சில வாரங்களாக சேவையாற்றாதிருந்த நேரங்களில் தனியாரினது மோட்டார் படகு சேவையில் ஈடுபட்டுவந்துள்ள போதும் அதற்கு தனிநபர் ஒருவருக்கு 30 ரூபா வாகனங்களுக்கு 20 ரூபாவாகவும் மொத்தம் 50 ரூபாவாக அறவிடப்பட்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாதை (பரி) திருத்தம் செய்யப்பட்டு சேவையாற்றி வருகின்ற நேரங்களில் வாகனங்களுக்கும் தனி நபருக்கும் தலா 10 ரூபாப்படி 20 ரூபா அறிவிடப்பட்டு வருகின்றதெனக் குறிப்பிடப்படுகின்றது.

ஆனால் (பரி) பாதை சேவையானது அடிக்கடி பழுதாகி வருகின்றமையால் காரைநகரில் இருந்து வேலைகள் நிமித்தமாகவோ அல்லது வேறு விடயங்களாக ஊர்காவற்றுறை மற்றும் வேலணை போன்ற இடங்களுக்குச் செல்வதனால் யாழ்ப்பாணம் வந்து அங்கிருந்துதான் தீவகப்பகுதிக்கு செல்ல வேண்டிய அவல நிலையில் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.(05)

# போதை எமக்கு பகை தெருவெளி ஆற்றுகை



வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதைப்பொருள் விழிப்புணர்வு பிரசார செயற்பாட்டின் அங்கமாக புத்தாக்க அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள் குமரனின் நெறியாள்கையில் புத்தாக்க அரங்க இயக்கக் கலைஞர்களினால் அராலி கிராமத்தில் "போதை எமக்கு பகை" எனனும் தெருவெளி ஆற்றுகை நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு நிகழ்த்தப்பட்டது. (63)

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் வன்னி)



அ.ஜெயராஜ்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

சிந்தனைச்சேகரமும், அனுபவ ஆசானும்தான் எம் வாழ்வை நெறிப்படுத்திக்கொண்டிருக்கின்றன. -அன்புவழியூர்க்கவிராயர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## முதலமைச்சர் வீசிய குண்டு!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலமாக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் ஆன சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் இந்தப் பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு வேட்பாளர்களை ஆதரிக்கப் போவதில்லை என்றும், அவர் கஜேந்திரகுமார் அணிக்கே சாதகமாகப் பேசி வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், தேர்தல் தொடர்பாக தன் நிலையை விளக்கி முதலமைச்சர் இப்போது அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் – வட மாகாண முதலமைச்சர் மக்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் என்பதாக அவர் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில், தான் இந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு அபேட்சகர்களை ஆதரித்துப் பேசப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் என்பவர் எல்லோருக்கும் பொதுவானவர் என்ற முறையில் பக்கச் சார்பற்று நடந்து கொள்ளப் போவதாகக் கூறியிருக்கிறார். ஆயுதக் குழுக்களோடு சேர்ந்திருப்பதைத் தன்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது; அதனால் தமிழரசுக் கட்சி சார்பில்தான் செயற்படுவேன் என்று சொல்லி சுரேஷ், செல்வம், சித்தர் ஆகியோரோடு முரண்பட்டுக் கொண்டவர் முதலமைச்சர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளித்த மக்கள்தான் முதலமைச்சரை மட்டுமல்லாது முப்பது உறுப்பினர்களையும் தெரிவு செய்து வடக்கு மாகாண சபையை கூட்டமைப்பு என்ற கட்சிக்குத் தந்தார்கள்.

இப்போது கூட்டமைப்பின் முதலமைச்சர், தனது கட்சியின் அரசியல் பலத்திற்காகப் பிரசாரம் செய்ய மாட்டேன் என்று சொல்வது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது அல்லது அதன் தலைமை மீது அவருக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி காரணமாகவே இருக்க வேண்டும்.

அவர் மேலும் தனது அறிக்கையில், "மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுபவர்களை எதிர்வரும் பொதுத்தேர்தலில் எமது மக்கள் தெரிவு செய்யவேண்டும்" என்றிருக்கிறார். தனது கட்சியினர் அர்ப்பணிப்புடன் மக்களுக்காகப் பணியாற்றுவார்கள் என்று அவரால் சொல்ல முடியாமல் இருக்கிறது என்பதுதான் இதன் பொருள்.

ஏனெனில், "எந்தக் கட்டத்திலும் எந்தக் காரணத்திற்காகவும் விலைபோகாத மனோதிடம் கொண்ட அரசியல்வாதிகளே எமக்குத் தேவைப்படுகின்றார்கள்..." என்றும் அந்த அறிக்கையில் சொல்கிறார். அதாவது கூட்டமைப்பு எம்பிக்கள் அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியிடம் அபிவிருத்திக்கு எனச் சொல்லிப் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டதற்கு அவர் எதிர்ப்புத் தெரிவித்ததையே குறிப்பிடுகிறார்.

பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்போது போருக்குப் பின்னரான சூழலில் எமது மக்கள் எதிர்நோக்கும் மூன்று முக்கிய சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியவர்களைத் தேர்ந்தெடுக்கச் சொல்கிறார். முதலாவதாக புனர்நிர்மாண மீள்குடியேற்ற அபிவிருத்திப் பணிகளையும், இரண்டாவதாக அரசியல் தீர்வையும், மூன்றாவதாக போரினால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க வேண்டியதையும் குறிப்பிடுகிறார்.

புனர்நிர்மாண அபிவிருத்திப் பணிகளை முதன்மைப்படுத்திக் குறிப்பிடுவதன் மூலம் கூட்டமைப்பினரை நிராகரிக்கச் சொல்லியே உணர்த்துகிறார். "தனிப்பட்ட மனித குழுக்களின் நன்மைகளுக்காக மட்டும் நடந்துகொள்ளாது, மற்றைய மக்கட் கூட்டங்களுக்குக் கெடுதி விளைவிக்காது, எமது தேர்தல் வாக்குறுதிகளும் விஞ்ஞாபனங்களும் இந்நாட்டின் கூடிய மக்களின் நலனைப் பேணும் விதமாக அமையவேண்டும்" என்றும் குறிப்பிட்டு, இணக்க அரசியலின் தேவையையும் முதலமைச்சர் உணர்த்துகிறார்.

அறிக்கையில் முத்தாய்ப்பாக அவர் குறிப்பிடுவதுதான் கூட்டமைப்பினர் மீதான கடுந்தாக்குதல். தேர்தல் காலங்களில் சுற்றுலாக்காலப் பயணிகள் போன்று நடந்து கொள்பவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டாம் என்றிருக்கிறார்.

- ஆசிரியர்

# இனவாதத்தை தூண்டி வாக்குச்சேகரிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சி

## பிரதிநீதியமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனவாதத்தை தூண்டி வாக்குகளை சேகரிக்க முற்படுவதாக, பிரதி நீதியமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருதத்துத் தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எனினும் ஐக்கிய இலங்கைக்குள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் ஒரு ஆட்சி முறைமையையே, ஐ.தே.க ஏற்படுத்தும்.

தற்போதைய நல்லாட்சியில் அனைவருக்கும் கருத்துச் சுதந்திரமும் ஜனாதிபதியை விமர்சிக்கும் சுதந்திரமும் உண்டு. இதற்கு முன்னர் இவ்வாறான ஒரு நிலை காணப்படவில்லை.

அத்துடன், வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம்.

தேர்தல் வெற்றியின் பின்னர் பாரியளவிலான வெளிநாட்டு முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம் அதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

# ரணில் சாரதியாக இருக்கும்வரை ஐ.தே.க.வாகனத்தில் ஏறமாட்டோம்

## முன்னாள் முதலமைச்சர் அதாஉல்லா உறுதி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சாரதியாக ரணில் விக்கிரமசிங்க இருக்கும்வரை நானும் எனது முஸ்லிம் சமூகமும் அந்த ஐ.தே.க. வாகனத்தில் ஒரு போதும் ஏறப்போவதுமில்லை, ஏறவுமாட்டோம். என்று தலைவர் மர்ஹூம் அஸ்ரப் அன்று கூறினார்.

அதனால்தான் தலைவர் அஸ்ரப் அவர்களின் பாசறையில் படம் போட்டவர்கள் என்ற வகையில் அந்த பஸ்ஸில் நான் ஏறப்போவதில்லை. என்று தேசிய காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா தெரிவித்தார்.

பொத்துவில் பிரதான வீதியில் நடைபெற்ற தேசிய காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி வென்றதுமில்லை, நாங்கள் தலைவர் அஸ்ரப் விட்ட இடத்திலிருந்து எமது பணியைத் தொடங்கியுள்ளோம்.

மகிந்த ராஜபக்ஷவை நாம் ஆதரித்தோம். இரண்டு முறை வாக்களித்தோம். ரணிலுக்கு வாக்களிக்கக் கூடாது என்பதற்காக அல்ல.

30 வருட காலம் புரையோடிப் போயிருந்த பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக. மகிந்த ராஜபக்ஷ 2009 இல் பயங்கரவாதத்தை ஒழித்து வடக்கையும், கிழக்கையும் பிரித்துத்தந்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஒரு தேவை ஏற்பட்டது. முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு நன்றிக் கடன் இருந்தது.

நாம் இன்று சுதந்திரமாக உலாவக்கூடிய சூழலை ஏற்படுத்தியமைக்காக ஒரு கூடைக்குள் எல்லா முட்டைகளையும் போடாமல் பாதுகாப்புக்காக வேறு வேறு கூடைகளில் போடவேண்டும் என்பதற்காகவும்,

முஸ்லிம்கள் எப்போதும் ஏமாற்றுக்காரர்கள் தொப்பி திரும்பும் பக்கம் திரும்பிப் போடுபவர்கள் என்கின்ற ஒரு நிலை வரக்கூடாது என்பதற்காகவும் முஸ்லிம்கள் வேறு தீர்மானம் எடுத்த சூழ் நிலையிலும் நாங்கள் உங்களுக்காக அதனைச் செய்ய வேண்டி ஏற்பட்டது.

உதாரணமாக 2 இலட்சம் வாக்குகள் மகிந்த ராஜபக்ஷவிற்கு மேலதிகமாகக் கிடைத்து அவர் வென்றிருந்தால் எமது நிலை என்னவாக இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

அதுவும் உங்கள் பாதுகாப்புக்காகத்தான். நாங்கள் அந்த முடிவினை எடுத்திருந்தாலும் இறைவனுடைய நாட்டம் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானார்கள்.

வெற்றிலைச் சின்னம் மகிந்த ராஜபக்ஷவினுடைய சின்னமல்ல. அது சந்திரிக்கா உருவாக்கிய சின்னம். அது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சின்னம். அதிலே பல தேர்தல்கள் நடந்திருக்கின்றன. அதிலும் பல தேர்தல்கள் சந்திரிக்கா காலத்திலும், மகிந்த ராஜபக்ஷ காலத்திலும் நடைபெற்றுள்ளன என்றார்.

# தேசியக்கொடியில் நிறங்களை அகற்றியது சிறுபான்மையினரை அடக்கும் சிந்தனையே

## மகிந்தவை சாடுகின்றார் அசாத்தாலி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறுபான்மை மக்களை அடக்கி ஒடுக்க பார்ப்பதாகவும், அதன் காரணமாகவே தேசிய கொடியில் சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறங்களை அகற்றுவதாகவும் மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத தெரிவித்தார்.

இதன்போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில் இணைந்து பெற்றுக்கொடுத்த சுதந்திர நாடு எமக்கு தேவையா அல்லது 9 வருட காலமாக நாட்டை நாசமாக்கிய மகிந்த ராஜபக்ஷ கையில இந்த நாட்டை கொடுப்பதா என்ற கட்டத்தில் நாம் உள்ளோம்.

கடந்த 9 வருடங்களாக நாட்டு மக்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை. வெள்ளைவான் வந்து மக்களை கொண்டுசென்றது.

ஊடகவியலாளர்கள் மிரட்டபபட்டு, கொலைசெய்யப்பட்டு மற்றும் அவர்களை நாட்டை விட்டு ஓடவைத்தனர். செய்தி ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு, மகிந்த தரப்பினர் கூறிய தலைப்புகளும் செய்திகளும் தான் பிரசுரிக்கப்பட்டன.

எனினும் இந்தச் செயற்பாடுகளை அவர்களால் அனைத்து ஊடகங்களிலும் மேற்கொள்ள முடியவில்லை. இவ்வாறான அராஜகங்கள் நிறைந்த மனிதனை கொண்டுவருவதா அல்லது சுதந்திரத்தை பெற்றுக்கொடுத்த மைத்திரிக்கு இந்த நாட்டை கொடுப்பதா என்பதை மக்கள்தான் தெரிவு செய்யவேண்டும் என்றார்.

# கட்சி உறுப்பினர்களின் உறுப்புரிமையை தனியொரு நபர் இடைநிறுத்த முடியாது

(கொழும்பு)

தனியொரு நபர் கட்சி உறுப்பினர்களது உறுப்புரிமையை இடைநிறுத்த முடியாது என அமைச்சர் எம்.கே.டி.எஸ் குணவர்தன தெரிவித்துள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டமை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்துவதற்கு கிரமமான பொறிமுறையொன்று உண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் ஐந்து உறுப்பினர்களின் உறுப்புரிமை அண்மையில் இரத்து செய்யப்பட்டிருந்தது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமை இடைநிறுத்தம் தொடர்பில் சில நியதிகள் பின்பற்ற வேண்டியிருக்கின்றது. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து, விசாரணை நடத்தியே உறுப்புரிமை இடைநிறுத்தப்பட வேண்டும்.

எமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் இதுவரையில் அறிவிக்கப் படவில்லை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளவில்லை எனவும், ஐக்கிய தேசிய முன்னணியில் இம்முறை பொதுத தேர்தலில் போட்டியிடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**நிலாந்தன், மென்சக்தி அரசியல் பற்றி அதிகம் உரையாற்றி வருகிறார். மிக நல்ல விசயம். ஆனால் அவரது உணர்வுகளும் உடலசைவுகளும் (பொடி லாங்வேச்) இன்னும் வன்முறையின் இன்னொரு வடிவத்தையே வெளிப்படுத்துகின்றன.**

# தேர்தல் களம் 2015ம் தமிழர் தரப்பும்!! -1

யோகா–ராஜன் (இணையதளக் கட்டுரையிலிருந்து)



19.07.2015 அன்று, பிபிசி தமிழோசையில் ஆகஸ்ட் 17இல் நடைபெறப்போகும் தேர்தலில் மக்களின் எதிர்பார்ப்புக் குறித்த கேள்விக்கான பதில் இவ்விதமாக எதிரொலித்தது!

**ஆண்குரல் ஒன்று:** "பொருளாதார முன்னேற்றம் முக்கியமானது. அதன்பொருட்டு காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஆகிவை மீள் இயக்கம் பெறவேண்டும். இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டும். அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைக்கப்பட வேண்டும்."

**பெண்ணொருவர்:** "போர் முடிந்து 6 வருடங்களாகியும் காணாமற்போன எங்கள் உறவுகளுக்கு முடிவில்லாமல் இருக்கிறது. அவர்களைக் கண்டுபிடித்துத் தரவேணும். வீட்டுத்திட்டத்தை முடித்துத் தரவேணும். இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகளை மீட்டுத் தரவேண்டும்."

**இன்னொரு ஆண்:** "ஏ9 பாதையில் 6வருடமாக இருக்கிறம். இன்றுவரை மின்சாரம் கிடையாது. சரியான பாதை இல்லை. எங்கடை அதிகாரிகளும் அரசாங்கமும்தான் இதுக்குப் பொறுப்பு! அரசியல்வாதிகள் மக்களுக்காகச் சாதிச்சது ஒண்டுமில்லை. கூட்டமைப்பு எதிர்க்கட்சி வரை போயிருக்கு, ஆனால் மக்களுக்காக சாதிச்சது ஒண்டுமில்லை. இனப்பிரச்சினைக்கும் ஒரு தீர்வு வேணும். அதுவும் கட்டாயந்தான்."

**மீண்டும் ஒரு பெண்குரல்:** "அப்பாவிகளை விடுதலை செய்யவேணும். காணாமற்போனவையைக் கண்டுபிடிச்சுத் தரவேணும். குறிப்பிட்ட சில தொகை இருக்கெண்டு அரசாங்கம் சொல்லியிருக்கு. அதை யாவது அரசாங்கம் வெளியில விடவேணும்!"

**ஓர் இளைஞன் குரல்:** "நில ஆக்கிரமிப்புப் பிரச்சினை, அரசியல் கைதிகள் பிரச்சினை, அன்றாடத் தேவைகள். இதைப் பூர்த்தி செய்யக்கூடியவர்களை அனுப்ப யோசிக்கிறம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலதடவை சென்றபோதும் எதுவும் நிகழவில்லை! த.தே.கூட்டமைப்பு எந்த நடவடிக்கையும் செய்யவில்லை"

இவற்றில் அதிஅழுத்தத்துக்குட் பட்டவை பொருளாதாரப் பிரச்சினைகளுடன் கூடிய அன்றாட வாழ்வாதாரப் பிரச்சினைகளே! இதில் வேலைவாய்ப்புக்கான முன்னெடுப்புக்களும் அடக்கம். அதற்கு அடுக்கதாக தாய்மார்களின் குரலாக ஒலித்த காணாமற்போனவர்கள் மற்றும் சிறைக்கைதிகள் பிரச்சினைகள் முக்கியத்துவம் பெறுகின்றன! இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அதிஅழுத்தத்துக்கு உட்பட்டிருக்கவில்லை என்பது வாஸ்தவமே!

தனிமனிதக் குரல்களாக இருப்பதனால் அவை நிதானமாக ஒலிக்கின்றன. நாடாளுமன்றப் பிரதிநிதிகளால் இலகுவில் சாதிக்கக்கூடிய வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும், கைதிகள், காணாமற்போனவர்கள் குறித்தும் அதிகமாக மொழிகின்றன. இதுவே கூட்டமாக அல்லது கும்பலாக மாறுகின்றபோது அரசியல்வாதிகளின் குரலாக ஒலிப்பது தமிழுக்கு ஒன்றும் புதிதல்ல. அச்சந்தர்ப்பங்களில் மக்கள் பரிதாபத்துக்குரியவர்களாக மாறுகிறார்கள்! தன்னிலையை இழந்துவிடுகிறாரகள்! அரசியல்வாதிகளின் நீரோட்டத்தில் அள்ளுப் பட்டு விடுகிறார்கள். தமிழர் வரலாறு மட்டுமல்ல உலக அரசியல் வரலாறு அனைத்துமே இதற்குச் சான்று!

உண்மையில் தனிமனித ரீதியில் ஒவ்வொரு தமிழனுக்கும் விளங்குகிறது. "கடந்த 60ஆண்டுகால அனுபவத்தில் முதல் 30ஆண்டுகால நாடாளுமன்ற அரசியலிலும், அடுத்துவந்த 30ஆண்டுகால வன்முறை அரசியலிலும் தீர்க்கப்படாத இனப்பிரச்சினைக்கு, அடுத்து வரும் 5ஆண்டுகால நாடாளுமன்ற வாழ்வுக்குள் எத்தகைய தீர்வையும் எட்டிவிட முடியாது" என்று!

**இவர்களில் பலரும் வழக்காடுவதையே தமது தொழிலாகக் கொண்டிருந்ததனாலும், அதனையே அரசியல்வாதிகளுக்கான பெருந்தகைமையாக எண்ணியதாலும், பொருளாதாரம் சார்ந்து போதிய ஞானம் அற்றவர்களாக இருந்தனர் தமிழ்த் தலைவர்கள். அத்துடன் மக்களின் வாழ்வியல் பிரச்சினை குறித்து இவர்கள் யாரும் பிரக்ஞைபூர்வமான உணர்வைக் கொண்டிருக்கவுமில்லை. கிராமம் கிராமமாக கீழ்நிலை மக்களிடம் நேரடியாகச் சென்று அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்ட மனிதர்கள்தான் தலைவர்களாக வேண்டும். இத்தகைய நடைமுறை தேர்தல்கால சமிக்ஞையாக மட்டும் இருக்கக்கூடாது.**

இந்நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் முன்வைக்கக்கூடிய தர்க்கம் "அன்றைய சூழல் வேறு, இன்றைய சூழல் வேறு. இன்று எமது பிரச்சினை உலகளாவியது. சர்வதேச அனுசரணைக்கு உட்பட்டது" என்று! ஆனால், சர்வதேச அரங்கில் உரையாடுவதற்குரிய தமிழரின் அரசியல் ஆற்றுகையில் இன்னும் மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை. அதை நோக்கி வளர்ச்சியடைவதற்கான முயற்சியும்-?

பொருளாதார அபிவிருத்தி சார்ந்து ஆரம்பகாலம் தொட்டு தமிழ்த் "தலைவர்கள்" பேரளவில் அக்கறை செலுத்தியிருக்கவில்லை என்பது உண்மையே! இவர்களில் பலரும் வழக்காடுவதையே தமது தொழிலாக் கொண்டிருந்ததனாலும், அதனையே அரசியல்வாதிகளுக்கான பெருந்தகைமையாக எண்ணியதாலும், பொருளாதாரம் சார்ந்து போதிய ஞானம் அற்றவர்களாக இருந்தனர் தமிழ்த் தலைவர்கள்.

அத்துடன் மக்களின் வாழ்வியல் பிரச்சினை குறித்து இவர்கள் யாரும் பிரக்ஞைபூர்வமான உணர்வைக் கொண்டிருக்கவுமில்லை என்பதும் யதார்த்தம். ஆனால் இதற்கு விதிவிலக்காக இருந்தவர்களில் காலம் சென்ற பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரத்தினம் முதன்மையானவர். மக்களிடம் நேரடியாகச் சென்று உரையாடியதன் மூலம் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை நன்கு அறிந்திருந்தார். கிராமம் கிராமமாக கீழ்நிலை மக்களிடம் நேரடியாகச் சென்று அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்ட மனிதர்கள்தான் தலைவர்களாக வேண்டும். இத்தகைய நடைமுறை தேர்தல்கால சமிக்ஞையாக மட்டும் இருக்கக்கூடாது.

இந் நிலைமைகளில் புதிய மந்தையில் பழைய கள்ளை ஊற்றுவது போல் சில முன்னெடுப்புக்ளைத் தோற்றுவிக்க முனைகிறார்கள் சில தமிழ்ப் புத்திஜீவிகள். அதில் குறிப்பானவர் நிலாந்தன். வித்தியாதரனையும் குறிப்பிடலாம். ஆனால் அவருடைய செயற்பாடுகள் இலகுவில் கண்டுகொள்ளுமளவுக்கு அதிகாரத்துவ நோக்கம் கொண்டது! ஆனால் நிலாந்தனின் நோக்கம் மெல்ல நகர்ந்து சாதிப்பது. அறிவதிகாரத்தின் மூலம் புலம்பெயர்ந்த தமிழர்கள், புத்திஜீவிகள் மற்றும் புதிய தலைமுறை உறவுகளிடத்தும் ஆளுமை செலுத்த முனைவது. பொதுநல நோக்கில் மிகுந்த விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டியது!

நிலாந்தனைக் காணும் வாய்ப்பு இருமுறை ஏற்பட்டது. ஒன்று, யாழ்ப்பாணத்தில் யோ.கர்ணனின் "சேகுவேரா இருந்த வீடு" நூல் வெளியீட்டின் போது. மற்றது ஒரு சில மாதங்களுக்கு முன் சுவிஸ் வந்தபோது. மற்றும் வன்சக்தி, மென்சக்தி எனும் கருத்தாக்கத்தை முன்வைக்கும் அவரது யூரியூப் பதிவையும் அவதானிக்க முடிந்தது. அவர் சுவிசுக்கு வந்ததன் நோக்கில் ஒன்று, புலிகள் முன்பு நடைமுறைப்படுத்தியது போன்ற தமிழர்க்கான ஒரு நிதிவைப்பகக் கட்டமைப்பை உருவாக்குதல் அல்லது அதற்கான கருத்துருக்களை விதைத்துவிட்டுச் செல்லல்.

இன்னொன்று புலம்பெயர் நாடுகளில் வாழும் இரண்டாவது தலைமுறை இளையோர்களை தமிழ்த்தேசிய உணர்வோடு தக்கவைப்பதற்கு முனைவது. கலை இலக்கிய அரசியல் சார்ந்து நன்கு அறியப்பட்ட நண்பர் ஒருவர் இதை மறுதலிப்பது போல கூறியவார்த்தை "எனது பிள்ளைகளுக்குக்கூட அத்தகைய உணர்வில்லை" என்பது.

மேலும் "இலங்கையின் இனப் பிரச்சினையில் மாறி மாறி வரும் சிங்கள அரசுகள் கடும்போக்கைக் கடைப்பிடிப்பதற்கான காரணங்களில் ஒன்று இந்தியத் தமிழரின் சனத்தொகை மீதான அச்சம். இது சகலரும் அறிந்த ஒன்று. இந் நிலையில் இவ்வித அச்சத்தைப் போக்கும் வகையில் இலங்கைத் தமிழரின் செயற்பாட்டில் ஏற்படவேண்டிய மாற்றம் குறித்து நிலாந்தனிடம் கேட்கப்பட்ட போது அவரது பதில் இப்படியாக அமைந்தது. "அது சிங்களவருடைய பிரச்சினை, அதற்கு நாம் ஒன்றும் செய்யத் தேவையில்லை" என்று!

இது பொறுப்பான விமர்சகருக்குரிய பதிலல்ல. நிலாந்தன், மென்சக்தி அரசியல் பற்றி அதிகம் உரையாற்றி வருகிறார். மிக நல்ல விசயம். ஆனால் அவரது உணர்வுகளும் உடலசைவுகளும் (பொடி லாங்வேச்) இன்னும் வன்முறையின் இன்னொரு வடிவத்தையே வெளிப்படுத்துகின்றன. மன்னிக்கவும், இச்சந்தர்ப்பத்தில் எமது பழைய நடைமுறைகள் சில நினைவுக்கு வருகின்றன. நாம் ஆரம்ப கால முப்பது ஆண்டுகளும் அதாவது, கறுப்புக்கொடி காட்டுதல், சத்தியாக்கிரகம், உண்ணா விரதம் என்று அகிம்சைப் வழிப்போராட்டங்களை மேற்கொண்ட போதும், எமது தலைவர்களின் பேச்சுக்கள் பலவும் வீரவசனங்களைக் கொண்ட இனவாதத் தூண்டல்களாக அமைந்தன.

(14ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டை பிரிக்கும் உடன்பாட்டில் ரணில் - சம்பந்தன் 'கூட்டணி

## சுசில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

ரணில் - சம்பந்தன் கூட்டணி நாட்டைப் பிரிக்கும் உடன்பாட்டில் தான் கைகோர்த்துள்ளது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெளியிட்டிருக்கும் தேர்தல் விஞ்ஞாபனமானது வடக்கையும், கிழக்கையும் ஒன்றிணைத்த தமிழர் தாயகமாகும். அவர்களது சுய நிர்ணய கோரிக்கையானது நாட்டில் மீண்டுமொரு பிரச்சினைக்கு வித்திட அதிக வாய்ப்புகள் உள்ளது. அது அவ்வாறு இருக்கையில் எதிர்வரும் பொதுத தேர்தலின் பின்னரும் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைபபாடாக உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் தேசிய அரசாங்கத்தில் முக்கிய பங்கு தாரர் தமிழ்த தேசியக் கூட்டமைப்பேயாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஓரணியில் தான் செயற்படுகின்றனர். ஆகவே இவர்களது தேசிய அரசாங்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்க்கும் தமிழீழத்தை ரணில நிச்சயமாக பெற்றுக்கொடுப்பார். அதற்கான காய்நகர்த்தல்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதிருந்தே முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

அதேபோல் தொடர்ந்தும் இவர்களுக்கு மக்கள் அனுமதி வழங்கினால் இந்த நாட்டில் மீண்டுமொரு ஆயுதக் கலவரம் உருவாகும் நிலை ஏற்படும். கடந்த காலத்தில் நாம் ஆயுத யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளோம். ஆகவே நாம் வென றெடுத்துள்ள சமாதானத்தை மீண்டும் பிரிவினையின் பக்கம் நகர்த்திவிடக் கூடாது.

எந்தவொரு நிலையிலும் பிரிவினைவாதத்துடன் 'செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இணைத்துக்கொள்ளும் நிலைப்பாட்டில் நாம் இல்லை. அதேபோல் கூட்டமைப்பின் தயவில் ஆட்சியை அமைக்கும் நிலைமை ஒன்றும் வரப்போவதில்லை. ஏனெனில் எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் நாம் பெரும்பான்மை ஆதரவுடன் ஆட்சியை அமைப்போம் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. அதேபோல் நாம் அதிகாரத்துக்கு வந்தால் எதிர்க்கட்சியில் இருந்து பலர் எம்முடன் வந்து கைகோர்ப்பார்கள் என்றார்.

# ஆடிவேல் விழாவில் ஜனாதிபதி



(கொழும்பு)

கொழும்பு, புறக்கோட்டை சம்மாங்கோடு சிறி கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் ஆடிவேல் விழா ஆரம்பமாகியது.

இதனையொட்டி சுவாமி தேரில் வீதியுலா வந்த போது ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வீதியுலா உற்சவத்தில் கலந்து கொண்டு ஆசி பெற்றுக் கொண்டார்.

கொழும்பு முதலாம் குறுக்குத்தெரு சிறி கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில் மற்றும் பம்பலப்பிட்டி சிறி மாணிக்க பிள்ளையார் ஆலய ஆடிவேல் உற்சவத்தின் சித்திரத்தேர் நகர் பவனி நேற்று முன்தினம் நடைபெற்றது.

தலைநகரில் நடைபெறுகின்ற இந்து ஆலய உற்சவங்களில் ஆடிவேல் உற்சவம் முக்கிய இடம் வகிக்கின்றது.

இந்நிகழ்வில் இந்துமதகுரு ஜனாதிபதிக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் மகிந்தவுக்கு வாக்களிக்கப்போவதில்லை

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மோசடிக்கு ஏமாந்து, மக்கள் இனியும் அவருக்கு வாக்களிக்கப் போவதில்லையென ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

காலி இந்துருவ பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில், மகிந்தவுக்கு மக்களின் ஆதரவு உள்ளதென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பொய்ப் பிரசாரம் மேற்கொண்டுவருகின்றது. மக்கள் மட்டுமன்றி அனைத்து சிறுபான்மை கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியுடனேயே இணைந்துள்ளன.

அத்துடன், ஐ.ம.சு.முன்னணியில் ஊழல் மோசடிகாரர்களுக்கு வேட்புமனு வழங்கப்பட்டுள்ளது, எமது கட்சியில் அவ்வாறான எந்தவொரு நபருக்கும் வேட்புமனு வழங்கவில்லை. ஜனாதிபதி மைத்திரி எம்முடன் இருப்பது மேலும் பக்கபலமாக இருக்கின்றது. இந்நிலையில், மக்கள் உண்மையையும் யதார்த்தத்தையும் புரிந்து கொண்டு தமது வாக்குகளை வழங்குவர் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் வன்னி)



அந்தோனிமுத்து அனஸ்ரின்



X 3

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# பிரிவினைவாதமும் சமஷ்டியும் சாத்தியமற்ற விடயங்கள்

## கூறுகின்றார் அமைச்சர் சம்பிக்க

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்புமஏனையவர்களும் பிரிவினைவாதமும், சமஷ்டியும் சாத்தியமற்ற விடயங்கள் என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 வருடகால யுத்தம் தமிழ் மக்களின் சமூக பொருளாதார வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவர்களுடன் ஒப்பிடும் போது மலையகத்தமிழர்கள். மற்றும் முஸ லீம்களின் பொருளாதர சமூக வாழ்க்கையில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது, இதற்குக் காரணம் அவர்கள் பெரும்பான்மை சிங்களவர்களுடன் தங்களை இணைத்துக்கொண்டு வாழ்வதேயாகும். தமிழ் மக்களும் அதனை பின்பற்றினால் பல விடயங்களை சாதிக்கலாம்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஏனையவர்களும் தற்போதைய நடைமுறைக்கேற்ப செயற்பட வேண்டும், பிரிவினைவாதமும், சமஷ்டியும் சாத்தியமற்ற விடயங்கள் என்பதை அவர்கள் எற்கவேண்டும். பிரிவினைவாதம் பயனளிக்காது.

இலங்கைச் சமூகம் ஒரு கருணைமிகுந்த சமூகம்,எமது நாடு பௌத்த தத்துவததை அடிப்படையாகக் கொண்டது,பௌத்த தத்துவம் சகல மக்களும் சமம் என்பதை எங்களுக்கு அறிவுறுத்துகின்றது,

இலங்கையில் தற்போது அமைதியான அரசியல் சூழல் காணப்படுகின்றது,அரச ஊடகங்கள் உட்பட அரச இயந்திரங்கள் தற்போது சுதந்திரமாக செயற்படுகின்றன.

இலங்கையின் புதிய அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கை இந்தியா, சீனா மற்றும் ஏனைய ஆசிய நாடுகளின் அதிகரித்துவரும் பொருளாதார பலத்தை கருத்திலெடுத்ததாகாவே காணப்படும் என்றார்.

# கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் நல்லிணக்கத்திற்குத் தடை

## ஜாதிக ஹெல உறுமய கவலை

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின தேர்தல் விஞ்ஞாபனம் நல்லிணக்கத்திற்கும் சமாதானத்திற்கும் தடையாக அமைந்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமய வேட்பாளர் நிசாந்த வர்ணசிங்க தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமய அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

1948 முதல் இன்று வரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவர்கள் இதேபோன்ற இனவாத விஞ்ஞாபனங்களையே வெளியிட்டு வந்தனர்.

தமிழ் அரசு கட்சி ஆரம்பித்ததால் தமிழ் இனம் வேறு திசைக்கு தள்ளப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் ஜனநாயகத்துக்கிருந்த தடைகளை அகற்ற த.தே. கூ.ஒத்துழைப்பு வழங்கியது.

இதேபோன்று தமிழ்ச் சமூகம் மீண்டும் இனவாதத்தின் பக்கம் செல்வதை தடுக்க தமிழ் அரசியல் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் தலைவர்கள் தொடர்ந்தும் தமிழ்ச் சமூகத்தை தவறாக வழி நடாத்தி சமஷ்டி ஊடாக நாட்டை துண்டாட முயன்றால் சம்பந்தன் போன்றவர்களுக்கும் வரலாற்றில் குப்பைத் தொட்டிக்குள் வாழ நேரிடும்.

1948 முதல் தமிழ் ஈழ



கருத்தை தமிழ்ச் சமூகத்திற்கு ஊட்டி ஆயுதம் ஏந்த உதவிய இவர்கள் இன்று ஆயுதம் வழங்க முடியாததால் மீண்டும் இனவாத அரசியலினூடாக தமது நோக்கத்தை நிறைவேற்ற முயல்கின்றனர் என்றார்.

**மேடம்**
நிலுவையின் ஒரு பகுதியாவது கைக்கெட்டும் நிலைப்பாடு ஏற்படல்.

**ரிஷபம்**
வருமானத்தின் பெரும்பகுதி மருத்துவச் செலவை ஏற்படுத்தல்.

**மிதுனம்**
வெளியூர் பயணத்திற்கான ஏற்பாட்டை மேற்கொள்ளல்.

**கடகம்**
பேதம் காரணமாக விவாகம் ஸ்தம்பித்து விடல்.

**சிம்மம்**
இரத்த உறவினர் மனைக்கு விஜயம் செய்தல்.

**மீனம்**
சரியாகக் கணக்கிடாது வைத்த பணத்தில் பிழை ஏற்படல்.

## முரசின் இன்றைய பலன்

(31.07.2015 வெள்ளிக்கிழமை

மன்மத வருஷம் ஆடி மாதம் 15 ஆம் திகதி.
சித்தயோகம் / பூரணைத்திதி
உத்தராட நட்சத்திரம் மு.ப - 11/15 வரை பின் பூரட்டாதி
இராகுகாலம் 10.33 - 12.03 வரை சுப நேரம் 06.03 - 07.33 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**கன்னி**
கொள்கையற்று திரியும் மைந்தனை எண்ணிக் கவலைப்படல்.

**கும்பம்**
பிதாவின் தேகநலம் பற்றிய அச்ச உணர்வும் பதகளிப்பும் நீங்கிவிடல்

**மகரம்**
வாகனப் போட்டாபோட்டியினால் விபத்துப் பற்றிய அச்சம் ஏற்படல்.

**தனுசு**
பொறுப்பின்றிப் பணத்தைக் கொடுப்பதை மனையாள் தடுத்து விடல்

**விருச்சிகம்**
பதவி நிரந்தரமாகும் செய்தி கிட்டி மகிழ்வடைதல்.

**துலாம்**
பெற்றோரின் தேகநலம் கருதி பயணத்தை ஒத்திவைத்தல்.

# அதி உன்னத உயர்வான வாழ்வை அப்துல் கலாம் அடையாளப்படுத்தினார்

## யாழ். வணிகர் கழகம் அஞ்சலி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

மாமேதையான அமரர் அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும் எமது எதிர்கால இளம் சந்ததியினர் இப்படியொரு மகான் எம்மிடையே வாழ்ந்தார் என்பதை நம்பமுடியாத அளவுக்கு மிகவும் உன்னத வாழ்க்கையை அவர் வாழ்ந்திருப்பதாக யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

அன்னாரது மறைவையொட்டி யாழ். வணிகர் கழகம் வெளியிட்டுள்ள அஞ்சலி அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

அவரது மறக்கமுடியாத அளப்பரிய பணிகளை நினைவு கூர்ந்து வெளியான அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இந்தியாவின் தென்கோடியான இராமேஸ்வரத்தில் மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்த போதும் பார்போற்றும் விஞ்ஞானியாகிய இந்திய நாட்டின் ஜனாதிபதியாகி சமூகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வாழும் மக்களின் இதயங்களிலும் வீற்றிருந்த அப்துல்கலாம் மறைந்து விட்டார் என்னும் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடை



கிறோம்.

ஏழைப்பங்காளனாகவும் மாணவ சமூகத்தின் வழிகாட்டியாகவும் திகழ்ந்த அந்த தமிழ் மகன் இன்று எம்மை விட்டு பிரிந்து விட்டார் என்பதை எம்மால் நம்பமுடியவில்லை.

இந்தியாவின் அதியுயர் பட்டமான பாரதரத்னா போன்ற பல பட்டங்களை பெற்ற அப்துல்கலாம் ஒரு விஞ்ஞானியாகவும், தலை சிறந்த ஆசானாகவும், மதிப்பு மிக்க ஆலோசகராகவும், சிறந்த வழிகாட்டியாவும் விளங்கினார். இந்தியாவின் ஜனாதிபதியான அவர் எம்மிடையே வாழ்ந்த ஒரு அதி உத்தம மகா புருஷர்.

ஒரு தமிழனாக பிறந்து தமிழனாகவே வாழ்ந்த அவர் திருக்குறளை மிகவும் நேசித்தார். அதனைப் பின்பற்றி தனது வாழ்க்கையையும் அமைத்துக் கொண்டார். எதிர்கால சமூகம் அன்னாரது வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும் போது இப்படியொரு மகான் எம்மிடையே வாழ்ந்தார் என்பதை நம்ப மறுக்கும் அளவுக்கு மிகவும் உன்னத வாழ்க்கையை அப்துல்கலாம் வாழ்ந்து காட்டினார்.

எமது பிள்ளைகளும் அன்னாரது வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொண்டு அவர் வழியில் அறிவு பூர்வமான உலகத்தை அமைத்துக்கொள்ளவேண்டும் என நாமும் எதிர்பார்க்கின்றோம். அதுவே இம் மகானுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

இப்பெருமகன் யாழ்ப்பாணம் வந்திருந்த போது அவரை சந்தித்தமையை ஒரு பாக்கியமாகவே நாம் கருதுகின்றோம். இச்சந்திப்பை மறக்கவே முடியாது. மிகவும் எளிமையாக எல்லோரிடத்திலும் சகஜமாக பழகிய இப்பெருமகன் தான் நேசித்த மாணவர் சமூகத்தின் முனபாகவே உயிர் நீத்தமையை அறியும் போது மெய்சிலிர்க்கிறது. இப் பெருமகனின் மறைவுக்காக யாழ். வணிகர் கழகம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திப்பதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லாட்சிக்கான ஆதரவை வழங்குவது காலத்தின் தேவை

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் கொள்கைத் திட்டங்களை செவ்வனே வழி நடாத்தக் கூடிய அரசொன்று அவசியமென தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில நல்லாட்சி ஒன்றுக்கு வகை செயயும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரி பாலவுக்கு தமது ஆதரவை வழங்கியதாகவும் இம்முறை பொதுத் தேர்தலில் அந்த நல்லாட்சியைத் தொடர்வதற்கான ஏற்பாடாக ஐக்கிய தேசியமுன்னணிக்கு தமது ஆதரவை வழங்கவுள்ளதாக தனியார் பேருந்து நிலையத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்தார்.

'கடந்த அரசாங்கத்தின் ஆட்சியில் பேருந்து, கைத்தொழில் மற்றும் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்துள்ளமை மற்றும் தமது கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டதை கவனத்தில் கொண்டும் தேசிய முன்னணிக்கு ஆதரவை வழங்க தமது சங்கம் தீர்மானத்தை மேற்கொண்டதாக அவர் கூறினார். நாடு எதிர்கொண்டுள்ள சமகால நெருக்கடிகளை நோக்கும் போது, ஐக்கிய தேசியமுன்னணியை ஆதரிப்பது காலத்தின் தேவையாகவுள்ளதாவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## நவாலி ஸ்ரீ கதிர்காம ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம்

(நவாலி)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நவாலி ஸ்ரீ. கதிர்காம முருகன் ஆலய தீர்த்த உற்சவம் நாளை சனிக்கிழமை காலை 7.15 மணிக்கு இடம்பெறும்.

நாளையதினம் மாலை 6.30 மணிக்கு பூசையும் கொடியிறக்க வைபவமும் இடம் பெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் விசேட பூசை வழிபாட்டைத் தொடர்ந்து கிராமிய ஊர்வலமும் இடம்பெறும்.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு வைரவர் சாந்தி பெருவிழா இடம்பெறும் என ஆலய பிரதம குரு தெரிவித்துள்ளார். (92)

# பூர்வீக நோக்கில் புதுக்குடியிருப்பு வரலாற்று ஆய்வுநூல் வெளியீடு




புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் வைரவிழாவை முன்னிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை "பூர்வீக நோக்கில் புதுக்குடியி[illegible]" என்கிற வரலாற்று ஆய்வு நூல் வெளியிடப்பட்டுள்ளது.

பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் தலைமையில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையிலும், சமூக ஆய்வுகளின் அடிப்படையிலும் இந்நூல் எழுத்துருவாக்கம் பெற்றுள்ளது.

இதில் வன்னியில் மனித பண்பாடு ஆரம்பித்த காலமான கற்காலம் தொடக்கம், 2015 ஆம் ஆண்டு வரைக்குமான புதுக்குடியிருப்பின் வரலாறு இடம்பெற்றுள்ளது. இந்தக் காலப்பகுதிகள் பிரதானமாக 4 கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அத்தியாயமும், துறைசார்ந்த ஒவ்வொருவராலும் எழுதப்பட்டுள்ளன.

வரலாற்று ஆய்வு நோக்கில் எழுதப்பட்டுள்ள இந்நூல் வன்னியின் வரலாற்றெழுத்தியலில் புதிய தொடக்கமெனவும், புதிய ஆய்வுமுறையியலின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ள முதல் நூல் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் - வன்னி)



குலசிங்கம் திலீபன்
முதன்மை வேட்பாளர்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# இரண்டு அணித்தலைவர் முறை இந்தியாவிற்கு சாதகமாகுமா?



(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட்டின் 3 நிலைகளிலும் (டெஸ்ட், ஒருநாள் போட்டி, மற்றும் 20 ஓவர் ஆட்டம்) கப்டனாக மகேந்திரசிங் டோனி பணியாற்றி வந்தார்.

கடந்த ஆண்டு அவுஸ்ரேலிய பயணத்தின் போது டெஸ்ட் போட்டியில் இருந்து டோனி திடீரென ஓய்வு பெற்றார். இதனால் விராட் ஹோலி டெஸ்ட் கப்டனாக நியமிக்கப்பட்டார். ஒருநாள் போட்டி மற்றும் 20 ஓவர் ஆட்டத்தில் டோனி கப்டனாக நீடித்து வருகிறார்.

இந்த இரண்டு கப்டன்கள் முறை இந்தியாவுக்கு சாதகமாக இருக்குமா? என்று முன்னாள் கப்டனும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான கங்குலியிடம் கருத்து கேட்கப்பட்டது. இது பற்றி அவர் கூறியதாவது,

டெஸ்ட், ஒரு நாள் போட்டி என 2 கப்டன்கள் முறையை இந்தியா இதற்கு முன்னர் பின்பற்றியது இல்லை. டோனி டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்று விட்டதால் இந்த சூழ்நிலை உருவானது.

ஆனால் அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, இலங்கை போன்ற அணிகளில் இரண்டு கப்டன்கள் முறை இருக்கின்றன. இரட்டைக்கப்டன் முறை இந்தியாவுக்கு சாதகமாக இருக்குமா? என்பதைப் பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும். நாம் வெற்றி பெற்றால் இந்த முறை கை கொடுக்கிறது, தோல்வி அடைந்தால் பாதகமாகி விட்டது என்று எடுத்துக் கொள்ளலாம்.

அனுபவம் வாய்ந்த சுழற்பந்து வீரர்கள் அனுபவமற்ற சுழற் பந்து வீரர்கள் என்பதில் பிரச்சினை இருக்காது. ஹர்பஜன் சிங், அஸ்வின், அமித் மிஸ்ரா ஆகியோர் மீது நம்பிக்கை உள்ளது. இந்தியாவில் விளையாடுவது போன்ற நிலை தான் இலங்கையிலும் இருக்கும். இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து ஆடுகளங்கள்தான் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு மிகப் பெரியசோதனையாகும். ஆதாயம் தரும் இரட்டை பதவி ஒப்பந்த முறை சரியானதே எந்தப்பிரச்சினையும் இல்லை என கங்குலி கூறியுள்ளார்.

# பந்துவீச்சை மேம்படுத்த கம்பீரிடம் ஆலோசனை



அவுஸ்ரேலியாவின் இளம் சுழற்பந்து வீச்சாளர் ஆஷ்டன் அகர் தனது பந்து வீச்சினை மேம்படுத்திக்கொள்ளும் நோக்கில் இந்திய கிரிக்கெட் வீரர் கவுதம் கம்பீரின் உதவியை பெற்றுள்ளார்.


கடந்த இரு ஆண்டுகளுக்கு முன் டெஸ்ட் போட்டியில் அறிமுகமான ஆஷ்டன் அகர் 11 ஆவது வீரராக களமிறங்கி 98 ரன்கள் அடித்து அனைவரது கவனத்தையும் ஈர்த்தார். ஆனால் பந்து வீச்சில் பெரிதாக சோபிக்கவில்லை. இதனால் அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

இந்நிலையில் தனது பந்து வீச்சினை மேம்படுத்தி மீண்டும் அணியில் இடம்பெறும் முயற்சிகளில் ஆஷ்டன் அகர் ஈடுபட்டு வருகின்றார்.

தற்போது சென்னையில் அவுஸ்ரேலிய ஏ அணிக்காக விளையாடி வரும் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போது, 'சில வாரங்களுக்கு முன்னர் கம்பீருக்கு பந்து வீசும் வாய்ப்புக்கிடைத்தது. சுழற்பந்துகளை மிகச் சிறப்பாக கையாளக் கூடிய கம்பீர் என்னுடைய பந்து வீச்சில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் குறித்து சில ஆலோசனைகளை வழங்கினார். தற்போது அவற்றை பின்பற்றி வருகிறேன்.

விரைவில் அவுஸ்ரேலியாவின் டெஸ்ட் அணியில் இடம் பிடிப்பேன்' என்று தெரிவித்துள்ளார்.

# குளிர்கால ஒலிம்பிக் போட்டி இன்று தெரியும் முடிவு



எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நடாத்தப்போகும் நாடுகளின் இறுதிப்பட்டியலில் சீனாவும் கஜகஸ்தானும் போட்டியிட்டு வருகின்றன.

2022 ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நடாத்துவது தொடர்பில் பல்வேறு நாடுகள் போட்டியிட்டு வருகின்றன. இந்நிலையில் தற்போது பீஜிங்கில் நடாத்துவதற்கு சீனாவும், அல்மாட்டியில் நடாத்துதற்கு கஜகஸ்தானும் கடுமையாகப்போட்டி போட்டு வருகின்றன.

இந்நிலையில் சர்வதேச ஒலிம்பிக்குழு இன்று வெள்ளிக்கிழமை இதற்கான வாக்கெடுப்பு ஒன்றினை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இதற்காக சீனா மற்றும் கஜகஸ்தான் நாட்டின் உயர்நிலை பிரதிநிதித்துவக் குழுக்கள் மலேஷியாவைச் சென்றடைந்துள்ளன.

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை தென்கொரியாவின் பியாங்சாங் நகரில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் 2022 ஆம் ஆண்டு சீனா அல்லது கஜகஸ்தானில் நடாத்தப்படும் பட்சத்தில் இது ஆசியாக்கண்டத்தில் நடாத்தப்படும் இரண்டாவது குளிர் கால ஒலிம்பிக் போட்டித் தொடராக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அஜ்மல், ஹபீஸ் பந்து வீச தடை பி.சி.சி.ஐ. தான் முக்கிய காரணம்

## பாக். முன்னாள் தலைவர் குற்றச்சாட்டு

(லாகூர்)

விதிமுறைக்கு மாறாக பந்து வீசியதாக இரண்டு முறை சிக்கிய பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மலுக்கு கடந்த ஆண்டு (2014) தடை விதிக்கப்பட்டது. இதேபோல் இந்த ஆண்டில் 2 ஆவது முறையாக விதிமுறைக்கு முரணாக சுழற்பந்து வீசிய சகலதுறைவீரர் முக மது ஹபீசுக்கு இந்த மாதத்தில் ஒரு ஆண்டு பந்து வீச தடை விதிக்கப்பட்டது. இருவருக்கும் விதிக்கப்பட்ட தடைக்கு இந்திய கிரிக்கெட் சபை தான் காரணம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முன்னாள் தலைவர் ஜாகா அஷ்ரப் குற்றம்சாட்டி இருக்கிறார். இது குறித்து ஜாகா அஷ்ரப் அளித்த பேட்டியில், 'பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முக்கிய சுழற்பந்து வீச்சாளர்கள் இருவருக்கு பந்து வீச தடை விதிக்கப்பட்டு இருப்பதற்கு இந்திய கிரிக்கெட் சபை சார்பில் சர்வதேச கிரிக்கெட சபை அளிக்கப்பட்ட அழுத்தமே காரணமாகும். கடந்த உலக கோப்பை போட்டி நெருங்கிய நேரத்தில் இருவரும் சஸ்பெண்டு செய்யப்பட்டனர். இதனால் பாகிஸ்தான் அணிக்கு உலக கோப்பை போட்டியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. முகமது ஹபீசுக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, சர்வதேச கிரிக்கெட் சபையிடம் மேன்முறையீடு செய்ய வேண்டும். முகமது ஹபீஸ் பந்து வீச்சை ஆயவு செய்ய சென்னையில் உள்ள ஆய்வு கூடத்துக்கு அனுப்ப எடுத்த முடிவு தவறானதாகும்' என்று தெரிவித்துள்ளார்.

## இரசிகர்களின் வெறித்தனம்

# கால்பந்து அணியை விற்பதற்கு முடிவு



இஸ்ரேல் பிரிமியர் கிளப் கால்பந்து போட்டிகளில் பங்கேற்கும் அணி பெய்டர் ஜெருசலம். கடந்த 2013 முதல் இதன் உரிமையாளராக உள்ளார் எலி தாபிப்.


இந்த அணியின் இரசிகர்கள் 'முரட்டு பக்தர்கள்' போல மைதானத்தில் அளவுக்கு அதிகமாக குற்றச்செயலில் ஈடுபடுவர். கடந்த மூன்று ஆண்டுகளில் மூன்றாவது முறையாக எலி தாபிப் மீது கொலை முயற்சி நடந்தது.

இந்த சோகத்தில் இருந்த இவருக்கு கடந்த வாரம் இரசிகர்களால் பெரிய தொல்லை ஏற்பட்டது. சார்லெராய் அணிக்கு எதிரான போட்டியின் போது பெற்றோல் குண்டுகள், பட்டாசுகள், புகையை கக்கச் செய்யும் பொருட்களை மைதானத்தில் வீசினர்.

... முடிந்து திரும்பிய போது சார்லெராய் அணி கோல் கீப்பர் நிகோலஸ் மீது கைக்கு கிடைத்த பொருட்களை எடுத்து வீசினர். இந்த சம்பவத்தால் பெய்டர் அணி மீது, ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பு கடும் நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிகிறது.

அணி உரிமையாளர் எலி தாபிப் கூறுகையில், 'இரசிகர்களின் செயல் அவமானமாக உள்ளது. இஷ்ரேல் கால்பந்து தொடர் மீதான எனது ஆர்வம் முடிவுக்கு வந்து விட்டது. மீண்டும் அமெரிக்கா செல்வேன். அணியை விருப்பம் இருப்பவர்கள் வாங்கிக் கொள்ளலாம்,' என்றார்.

# தடை தொடரும்



(புதுடில்லி)

ஸ்ரீசாந்த், அன்கித் சவானின் செயற்பாடு குறித்து ஊழல் தடுப்பு குழு தந்த அறிக்கையின் கீழ் தடை விதிக்கப்பட்டது. இவர்களின் தடை நீடிக்கும், என, பி.சி.சி.ஐ., செயலர் அனுராக் தாகூர் தெரிவித்தார்.

ஆறாவது பிரிமியர் கிரிக்கெட் தொடரின் சூதாட்ட சர்ச்சையில் ராஜஸ்தான் அணி ... யின் ஸ்ரீசாந்த், அன்கித் சவான், சண்டிலா சிக்கினர். இது குறித்து விசாரித்த டில்லி விசாரணை நீதிமன்றம் மூவரையும் விடுவித்தது. இதனையடுத்து ஸ்ரீசாந்த், அங்கித் மீதான வாழ்நாள் தடையை இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) விலக்கிக் கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டது. இதை கேரள கிரிக்கெட் சங்கமும் வலியுறுத்தியது.

இது குறித்து பி.சி.சி.ஐ., செயலர் அனுராக் தாகூர் கூறுகையில், 'கடந்த காலத்தில் ஸ்ரீசாந்த், அன்கித் செயற்பாடு குறித்து ஊழல் தடுப்பு குழு அறிக்கை தந்தது. இதை வைத்துதான் பி.சி.சி.ஐ., ஒழுங்குமுறை கமிட்டி இவர்கள் மீது நடவடிக்கை எடுத்தது. எனவே தடை நீடிக்கும். இதை நீக்க முடியாது' என்றார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் — வன்னி)



பொ.குணபாலா



X

5

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# வடமாகாண வல்லவன்

# 47 அணிகள் பங்கேற்பு



நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகத்தினால் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்று விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

வடமாகாண வல்லவன் எனப் பெயரிடப்பட்ட இந்த சுற்றுத் தொடரில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மொத தம் 47 அணிகள் மோதவுள்ளன. இந்தப் போட்டியில் பங்கு பற்றவுள்ள அணிகள் வருமாறு

யாழ்ப்பாணம்

சென்மேரிஸ், நவசக்தி, ஸ்ரீ அம்பாள், அன்பாலயம், ஞான முருகன், மயிலிட்டி கண்ணகி, குறிஞ்சிக்குமரன், பாடும் மீன், திக்கம்இளைஞர், அராலி ஜேம்ஸ், தொண்டைமானாறு ஒற்றுமை, மனோகரா, நெடியகாடு, நக்கீரன், ஆனைக்கோட்டை, கொலின்ஸ், உடற்கல்வி ஐக்கியம், நவஜீவன்ஸ், யங்கம்பன்ஸ், றோயல், கலைமதி, ஆதிசக்தி, சென்ஜேம்ஸ், உடுப்பிட்டி யூத், ஞானகலா, றேஞ்சர்ஸ், மூளாய் வளர்மதி, சென்அன்ரனீஸ், விண்மீன், அல்வாய் நண்பர்கள், பொம்மேர்ஸ், சென்சேவியர், சென்தோமஸ்யூத், வல்வை, கரு ணாகரன், டைமன்ஸ்

கிளிநொச்சி

சென்ஆனஸ், சென் மேரிஸ் நாச் சிக்குடா, ஜெகமீட்பர், இளம் தளிர்

மன்னார்

குரோஸ்ரார், சென்அன்ரனீஸ், சென்லூசியஸ், விடத்தல் தீவு ஐக்கியம், கில்லாஜி, சென்வோகல், புனித அந்தோனியார்

# வென்றது யங்கம்பன்ஸ்



(புத்தூர்)

புத்தூர் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கால்பந்தாட்ட அணிகளிடையே நடாத்தி வரும் அணிக்கு 11 பேர் கொண்ட கால்பந்தாட்ட சுற்றுத் தொடரில் யங்கம்பன்ஸ் வெற்றி பெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் புத்தூர் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இப் போட்டி இடம் பெற்றது. இவ் ஆட்டத்தில் சக்கோட்டை சென் சேவியர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மோதிய கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. யங்கம்பன்ஸ் சார்பாக ரதன் 1 கோலைப்பெற்றார்.

# விலகினார் சமீர



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர இந்திய அணிக்கு எதிராக காலி மைதானத்தில் நடைபெறவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட ஹோலி தலைமையிலான இந்திய அணி எதிர்வரும் 3 ஆம் திகதி இலங்கை வருகின்றது.

இந்திய அணிக்கு எதிராக இலங்கை அணி மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி ஒகஸ்ட் 12 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை காலி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், காயமடைந்திருக்கும் இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சாளர் சமீர போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பு இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் நடந்து முடிந்த பாகிஸதான அணிக்கு எதிரான இறுதி டெஸ்ட் போட்டியிலும் ஐந்து ஒரு நாள் போட்டிகளிலும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தங்கமங்கை



(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 8ஆவது தடகளப்போட்டியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி சி.ஆரணி நீளம் பாய்தலில் 5.01 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப்பதக்கத்தினை பெற்றுக் கொண்டார்.

அத்துடன் இம்மாணவி பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெற்ற மாவட்ட மட்ட தடகளப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகம் சார்பில் கலந்து கொண்டு நீளம் பாய்தலில் 5.36 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையுடன் தங்கப்பதக்கத்தினைப் பெற்றுக் கொண்டார்.

# 15 வயது ஆண்கள் பிரிவு ஹொக்கி சம்பியனானது தெல்.மகாஜன

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியுடனான 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஹொக்கி சுற்றுப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜன வென்று சம்பியனானது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் உடற்கல்வி ஆசிரியர் அமரர் பத்மநாதன் நினைவாக கடந்த செவ்வாய்க் கிழமை கல்லூரி மைதானத்தில் 15 வயதுப்பிரிவுக்கான ஹொக்கி சுற்றுப் போட்டி கல்லூரி அதிபர் மணிசேகரன் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக இடம்பெற்ற இப் போட்டியின் முதல் பாதி ஆட்டம் நிறைவிற்கு வந்த வேளை மகாஜன ஒரு கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. இடைவேளையின் பின்னர் மீளவும் ஆட்டம் ஆரம்பித்த நிலையில் இரு அணிகளும கோல்களைப் போட முயற்சித்த போதிலும் அது பலனளிக்கவில்லை. இதனால் மகாஜன 1:0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனானது. (93)

# டெஸ்ட் வீரர் என நிரூபிக்க வாய்ப்பு வழங்கப்படவில்லை

## ரெய்னா ஆதங்கம்

தான் ஒரு டெஸ்ட் கிரிக்கெட் வீரர் என்பதை நிரூபிக்க போதுமான வாய்ப்புகள் தனக்கு வழங்கப்படவில்லை என்று சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு அவர் இது குறித்து அளித்த பேட்டியில் கூறும்போது, 'ஒரு நாள் மற்றும் ரி20 போட்டிகளில் சீரான முறையில் ரன்களை எடுத்து வருகிறேன். ஐ.பி.எல். கிரிக்கெட்டிலும் கூட ரன்கள் எடுத்தேன்.

ஆனால், 2012 ஆம் ஆண்டு 3 டெஸ்ட் இனிங்ஸ்களில் நான் சோபிக்கவில்லை என்பது உண்மைதான், 2015 இலும் இதே கதை தான் தொடர்ந்தது. இதனால் டெஸ்ட் போட்டி அணியில் இருக்கும் அளவுக்கு எனக்கு அனுபவம போதாது என்று கூற முடியாது.

ஒரு டெஸ்ட் வீரராக என்னை நிரூபிக்க போதிய வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. மிகவும் நெரிசலான ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளிடையே, டெஸ்ட் போட்டி ஆடும் போது ஓரிரு போட்டியை வைத்து ஒருவரது திறமையை எடைபோடலாகாது.

நான் 5 டெஸ்ட் போட்டிகளில் ஆடவேண்டும் என்று கூறவில்லை, 2 அல்லது 3 போட்டிகள் எனக்கு வாய்ப்புக் கொடுத்துப் பாருங்கள். நான் ரன்கள் எடுக்கவில்லையெனில் என்னை அதன் பிறகு ஒருபோதும் தேர்வு செய்ய வேண்டாம்.

டெஸ்ட் மட்டத்தில் சீராக ரன் எடுப்பதற்கான திறமை என்னிடம் இருப்பதாக நான் உறுதியாக நம்புகிறேன். எனவே வாய்ப்பு அளிக்க வேண்டும்.

உள்நாட்டு போட்டிகள் எனக்கு டெஸ்ட் மட்டத்தில் இடம் கிடைக்க சிறந்த நடைமேடை அமைதத்துக் கொடுக்கும். நான் டெஸ்ட் இடத்திற்காக போராடுகிறேன். தென்னாபிரிக்க அணி இங்கு டெஸ்ட் போட்டிகளில் ஆட வரும் போது நான் 4 அல்லது 5 ரஞ்சி போட்டிகளில் ஆடவிருக்கிறேன்' என்றார்.

2010 இல் டெஸ்ட் அறிமுகப் போட்டியில் கொழும்பில் சதம் கண்டார் ரெய்னா. அதன் பிறகு உதிரி உதிரியாக 18 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ளார். 2010 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்குப்பிறகு ரெய்னா நீக்கப்பட்டார். 6 இனிங்ஸ்களில் 32 ரன்களையே ரெய்னா எடுத்திருந்தார்.



2011 ஆம் ஆண்டு மே.இ.தீவுகள் தொடரிலும் பிறகு இங்கிலாந்து தொடரிலும் 7 டெஸ்ட் போட்டிகள் அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. அவர் 13 இனிங்ஸகளில் 337 ரன்களை 25.92 என்ற சராசரியில் எடுத்தார்.

2012 இல் நியூஸிலாந்துக்கு எதிராக 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடருக்கு ரெய்னா மீண்டும் தேர்வு செய்யப்பட்டார், ஆனால் அவரோ 58 ரன்களை மட்டுமே எடுத்தார். கடைசியாக டெஸ்ட் அணிக்கு அவர் மீண்டும் அழைக்கப்பட்ட போது சிட்னியில் இரு இனிங்ஸ்களிலும் டக் அவுட் ஆனதும் கவனிக்கத்தக்கது.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் – வன்னி)




விஜயரட்ணம் சுரேந்தர்
(சுரேன்)




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# சுதந்திரக் கட்சியின் உள் முரண்பாடும், ஆடு நனைகிறது என்று அழுகின்ற ஓநாய்களும்!

**- வானவில் 55 இதழிலிருந்து.**




சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள் முரண்பாடு ஏற்பட்டிருப்பது இப்பொழுது ஒரு இரகசியமான விடயமல்ல. அதைத் தீர்ப்பதற்கான முயற்சிகளிலும் அக்கட்சியின் நலன் விரும்பிகள் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் இரகசியமல்ல. அது அவர்கள் உட்கட்சி விவகாரம் என்றபடியால், ஏனைய கட்சியினர் அது பற்றி பெரிதாக ஏதும் அலட்டிக் கொள்வதில்லை.

ஆனால், வேண்டாத விருந்தாளி ஒருவர், அதுவும் அந்தக் கட்சியை சர்வசதா காலமும் எதிர்த்து வந்த கூட்டத்தின் பிரதிநிதி ஒருவர், அந்தக் கட்சிக்குப் புத்திமதி சொல்ல எத்தனித்திருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தான் அவர். அவரது "ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத கதை"யைப் பார்ப்பதற்கு முன்னர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வரலாற்றைச் சுருக்கமாகப் பார்த்து விடுவோம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி 1951ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து வந்த எஸ்.டப்ளியு.ஆர்.டி. பண்டாரநாயக்கவினால் உருவாக்கப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அக்கட்சியை முதன்முதலாக உருவாக்குவதற்காக இணைந்து பணியாற்றியவர்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தந்தையார் டி.ஏ.ராஜபக்சவும் ஒருவர்.

ஐ.தே.கவை விட்டு பண்டாரநாயக்க வெளியேறி வந்ததற்குக் காரணம், அக்கட்சி பின்பற்றிய ஏகாதிபத்திய சார்பு, தேச விரோதக் கொள்கைகளே. அதன் காரணமாகவே மக்களின் ஆதரவைப் பெற்று மிகக் குறுகிய காலத்தில், 1956இல் சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றி பண்டாரநாயக்க தலைமையில் அரசு அமைத்தது.

பண்டாரநாயக்க தனது ஏகாதிபத்திய விரோதக் கொள்கைகளுக்கு இணங்கவும், மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றும் முகமாகவும், பல தீவிரமான ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதன் காரணமாகவே பிற்போக்கு சக்திகள் அவரை 1959 செப்ரெம்பரில் படுகொலை செய்தன.

அவரது மரணத்தின் பின்னர், அவரது மனைவி சிறீமாவோ கட்சியின் தலைவியாகவும், நாட்டின் பிரதமராகவும் மக்கள் செல்வாக்குடன் பல தடவைகள் பதவிகள் வகித்தார். அவரும் தனது கணவரின் ஏகாதிபத்திய விரோதக் கொள்கைகளையே தீவிரமாகப் பின்பற்றினார்.

அவருக்குப் பின்னர் அவர்களது குடும்பத்தில் இருந்து தலைமையை ஏற்க ஆளில்லாதபடியால் (மகன் அனுர ஐ.தே.கவில் சங்கமமாகியிருந்தார்), சுதந்திரக் கட்சியை விட்டுச் சென்று தனது கணவருடன் "சிறிலங்கா மக்கள் கட்சி" என்ற பெயரில் ஒரு கட்சியை நடாத்தி வந்த தனது கனிஸ்ட புத்திரி சந்திரிகாவை திரும்பவும் கட்சிக்குக் கொண்டு வந்து கட்சியின் தலைவியாகவும், நாட்டின் தலைவியாகவும் தலைமைத்துவம் வகிப்பதற்கு தாயார் சிறீமாவோ வழிவகுத்தார். (சந்திரிகவின் கணவர் விஜேகுமாரதுங்க முன்னதாக ஜே.வி.பி. கொலைகாரர்களால் கொல்லப்பட்டிருந்தார்)

சந்திரிகாவின் 11 வருட ஆட்சிக் காலத்தில், அவர் தமது பெற்றோர் பின்பற்றிய தீவிரமான ஏகாதிபத்திய விரோதக் கொள்கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, ஏகாதிபத்திய சார்பு மேற்குலகிற்கும், ஏகாதிபத்திய எதிர்ப்பு கிழக்குலகிற்கும் இடையே ஊசலாடுபவராக, சமரசம் செய்பவராக இருந்தார்.

தமது முன்னைய தலைவர்கள் யாரும் பின்பற்றாத வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தனும் சந்திரிகாவுடன் மிகவும் அந்நியோன்யமான உறவுகளை அவரது ஆட்சிக் காலத்தின் போது கொண்டிருந்தார். (பின்னர் புலிகளின் தந்திரோபாயம் காரணமாக அந்த உறவைச் சம்பந்தன் முறித்துக் கொள்ள வேண்டி வந்தது. இப்பொழுது புலிகள் இல்லாதபடியால், மீண்டும் சம்பந்தன் - சந்திரிகா தேன்நிலவு ஆரம்பமாகியுள்ளது)

அந்த உறவு தமிழ் மக்களுக்கு ஏதாவது சிறு உரிமைகளைத் தன்னும் பெற்றுக் கொடுப்பதற்காக அல்ல. தனிப்பட்ட முறையில் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே. (இது பற்றி சந்திரிகவே தனிப்பட்ட முறையில் தனது நெருங்கிய சகாக்களிடம் ஒரு சமயத்தில் புலம்பியதாகக் கதை உண்டு)

சந்திரிகாவுக்குப் பின்னர் மகிந்த சுதந்திரக் கட்சியின் தலைவராகவும், நாட்டின் ஜனாதிபதியாகவும் பதவி ஏற்றார். இவர் பண்டாரநாயக்கவும் அவரது மனைவி சிறீமாவோவும் பின்பற்றியது போல தீவிரமான ஏகாதிபத்திய விரோதக் கொள்கைகளைப் பின்பற்றினார். (இதை அவர் முற்று முழுதான மன விருப்பத்தின் பேரில் செய்தாரா அல்லது மேற்கு வல்லாதிக்க சக்திகள் கொடுத்த நெருக்கடி காரணமாக அந்த நிலைப்பாட்டை எடுத்தாரா என்பது ஆராய்வுக்குரியது)

அதுவே அவரது ஆட்சியை மேற்கத்தைய சக்திகள் தீவிரமாக எதிர்க்கக் காரணமாகியது. அதனாலேயே, உள்நாட்டு - வெளிநாட்டுச் சக்திகள் ஒன்றிணைந்து இவ்வருடம் ஜனவரி 8ஆம் திகதி ஒரு ஆட்சி மாற்றத்தைச் செய்ய வழிவகுத்தது.

எப்பொழுதுமே சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகளை கடுமையாக எதிர்த்து வரும் தமிழ்த் தலைமைகளின் வழி வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இப்பொழுது முன்பு அவர்களுக்குக் கசப்பாக இருந்த சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதியாக இருக்கும் - ஆனால் யதார்த்தத்தில் ஐ.தே.க. அரசாக உள்ள - அரசை ஆதரிக்கின்றது.

இதற்கு முன்னர் சுதந்திர இலங்கையில் தமிழர்களின் முதல் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அ.அமிர்தலிங்கம், வே.பிரபாகரன் எவரூமே சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகளை ஆதரித்தது கிடையாது. தமிழ்த் தலைமைகளின் தொடர்ச்சியான ஏகாதிபத்திய ஆதரவுப் போக்கே அதற்குக் காரணம்.

இப்பொழுது சுதந்திரக் கட்சிக்குள் முரண்பாடு தோன்றியுள்ளதற்குக் காரணம், அதன் தற்போதைய தலைவராக இருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அவரை வழிநடாத்தும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும், சுதந்திரக் கட்சியின் பாரம்பரியமான ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகளைக் கைவிட்டதும், அதன் முன்னைய தலைமைகளால் ஒருபோதும் செய்ய நினைக்காத வகையில் அதன் பரம வைரியான பிற்போக்கு ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்ந்ததுமாகும். அதன் காரணமாகவே, சுதந்திரக் கட்சியின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகளைக் காலம் காலமாக ஆதரித்து வந்த அதன் ஆயிரக்கணக்கான அங்கத்தவர்களும், அக்கட்சியை ஆதரிக்கும் பொதுமக்களும் மகிந்த ராஜபக்சவின் பின்னால் அணிதிரண்டு நிற்கின்றனர்.

இத்தகைய ஒரு நிலையில்தான், அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தன், "சிறிலங்கா சுதந்திரக் கட்சி இலங்கையில் உள்ள மிதவாதமான கட்சி எனினும் இதனைக் கைப்பற்றுவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். இதில் தொங்கிக் கொண்டு சிலர் இருக்கின்றனர். பிழையானவர்களின் கைகளில் சுதந்திரக் கட்சி சென்றுவிடக் கூடாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுதந்திரக் கட்சி முன்கொண்டு செல்லப்பட வேண்டும்" என அங்கலாய்த்துள்ளார். ("தினகரன்" நாளேட்டுச் செய்தி)

காலம் காலமாக பண்டாரநாயக்க, அவர் மனைவி சிறிமாவோ, மகிந்த ராஜபக்ச என முன்னைய சுதந்திரக் கட்சித் தலைமைகளை எல்லாம் கர்ணகடூரமாக எதிர்த்து, அவர்களை எல்லாம் தமிழர்களின் பரம விரோதிகளாகவும், ஐ.தே.கவே தமிழர்களின் நண்பன் எனவும் காட்டி வந்த தமிழ்த் தலைமை, இப்பொழுது சம்பந்தனின் வாயால் மைத்திரியின் தலைமைக்கு நற்சான்றுப் பத்திரம் வழங்கியுள்ளதுடன், சந்திரிகாவுடனும் கூடிக்குலாவ ஆரம்பித்துள்ளது எனின், அவர்கள் இருவரும் சுதந்திரக் கட்சியை இன்னொரு ஐ.தே.கவாக மாற்ற முயல்கின்றனர் என்பதே காரணம்.

# கர்ப்ப காலத்தில் உண்பது எவ்வாறு?


**வைத்தியர் பிரதீபனா செல்வகரன்**
**நீரிழிவு சிகிச்சை நிலையம்.**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

நாம் கர்ப்பகாலத்தில் உண்ண வேண்டிய உணவானது எமது உடற்திணிவுச் சுட்டிக்கும் எமது உடற் தொழிற்பாட்டின் அளவுக்கும் ஏற்ப மாறுபடும். முதல் மூன்று மாதங்களில் போசனைப் பொருள்களின் தேவையானது மிகச் சிறியளவிலேயே அதிகரிக்கின்றது. பின்பு சீராக அதிகரித்து 6 மாதங்களின் பின்னர் இத்தேவை உச்ச நிலையை அடையும்.

## உண்பது எவற்றை?

எமக்கு ஏற்ற நிலை அதிகரிப்பு எவ்வளவு என்பதற்கு அமைவாக ஆறு வகை உணவுப் பொருட்களிலிருந்து தெரிவு செய்து உண்ண வேண்டும். உண்ணக்கூடிய 6 வகை உணவுகளுக்கான சில பரிந்துரைகள்:

❖ பாண் ஏனைய தானியங்கள், கிழங்குகள்
❖ சோறு 7 - 11 பரிமாறல்கள்
❖ பழங்கள் - 3 - 4 பரிமாறல்கள்
❖ பால் மற்றும் பாற்பொருள்கள் 1 - 2 பரிமாறல்கள்



❖ மீன், இறைச்சி, முட்டை, அவரையினங்கள், 2 - 3 பரிமாறல்கள்
❖ கடலை எண்ணெய் வகைகள் 2 - 4 பரிமாறல்கள்
❖ நீர்ப்பானங்கள் தேவையான அளவு - குறைந்த பட்சம் 8 - 10 கப் தினமும் அருந்த வேண்டும்.
❖ மலச்சிக்கலை தவிர்க்க நார்ப் பொருள்கள் நிறைந்த உணவைப் போதியளவு எடுக்க வேண்டும்.
❖ போசனைக் கூறுகள் நிறைந்த உணவு வகைகளை சாப்பாட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.


(அதற்குச் சமமான பாற்பொருள்கள்)
❖ ஆகக் குறைந்தது ஒரு கப் பால் தினமும் அருந்த வேண்டும்.
❖ மது வகைகள் மற்றும் புகைப்பிடிப்பதை (புகைப்பிடிப்பவர் எதிரே அமர்வது உட்பட) தவிர்க்க வேண்டும்.

## கர்ப்பகாலத்தில் தேவைப்படும் நுண் போசணைக் கூறுகள் எவை?

இவை எமக்குச் சிறியளவில் தேவைப்படும் போசணைக்கூறுகளாகும். போலிக் அமிலம், இரும்பு, கல்சியம், விற்றமின் சி, அயடின் என்பவை இவற்றுள் சில. இவற்றின் குறைபாடானது எமது கர்ப்பத்தையும், பிறக்கப் போகும் குழந்தையின் ஆரோக்கியத்தையும் மோசமாகப் பாதிக்கும். போலிக் அமிலம் முள்ளந்தண்டின் விருத்தியில் ஏற்படும் குறைபாட்டைத் தவிர்க்கும். எனவே இதனைக் கர்ப்பமாவதற்கு முன்பிருந்து கர்ப்பகாலம் முழுமையாகவும் பாவிக்க வேண்டும்.

இரும்புச் சத்து இதன் தேவை 3 மாதங்களின் பின்னர் அதிகரிக்கத் தொடங்கி பிந்திய கர்ப்ப காலத்தில் உச்ச அளவை அடையும். அத்துடன் பாலூட்டும் காலத்திலும் இதன் தேவை அதிகமாகவே

# ஆந்தையும் ஃபீனிக்ஸ் பறவையும்



லியாங் என்ற நாட்டின் தலைமையமைச்சராக வெய்சு என்பவர் பதவியேற்றார். சில காலம் கழித்து ஷுவாங்சு என்பவர் அவரைச் சந்திக்கத் தலைநகருக்கு வந்திருந்தார்.

வெய்சுவுடன் இருந்த நண்பர் ஒருவர், "இப்போது ஷுவாங்சு தலைநகருக்கு வருவதற்குக் காரணம் என்னவென்று தெரியுமா? தங்களுடைய தலைமையமைச்சர் பதவியைப் பறித்துத் தான் தலைமையமைச்சராவதற்குத்தான் ஷுவாங்சு இங்கே வந்துள்ளார்" என்று கூறினார்.

இதைக்கேட்ட வெய்சுவுக்குக் குழப்பமேற்பட்டது. ஷுவாங்சு தன்னைவிடத் திறமைசாலி, நிச்சயம் நண்பர் சொன்னது போல், தன் பதவி பறிபோவதற்கான வாய்ப்புகள் அதிகம் தான் என்று உள்ளுக்குள் புழுங்கினார். சரி, முதலில் ஷுவாங்சுவை நாமே சந்தித்துப் பேசுவோம் என்று புறப்பட்டார்.

இதையறிந்த ஷுவாங்சு தானிருந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்குச் சென்று விட்டார்.

வெய்சு அந்த நகர் முழுவதும் தேடியும் ஷுவாங்சுவை கண்டுபிடிக்க முடியவில்லை. என்ன ஆனதோ, ஏதானதோ என்ற குழப்பமும், பதவி பறிபோனால் நாம் ஒன்றுமில்லாமல் போய்விடுவோமே என்ற கலக்கம் மறுபுறமுமாய் வெய்சு அலைந்து திரிந்தும் ஷுவாங்சுவை காண-முடியாமல் திரும்பினார்.

சில நாட்களில் ஷுவாங்சுவே வெய்சுவை சந்திக்கச் சென்றார்.

தெற்கே ஃபீனிக்ஸ் என்ற ஒரு பறவை இருக்கிறது, அதைப் பற்றி நீ கேள்விப்பட்டதுண்டா? என்று வெய்சுவை நோக்கி வினவிய ஷுவாங்சு பதிலுக்கு காத்திராமல் தொடர்ந்தார்,

இந்த ஃபீனிக்ஸ் பறவை தென் கடலிலிருந்து புறப்பட்டு வட கடல் நோக்கிப் பறக்கும். மிக அழகான சிறப்புமிக்க பாராசால் மரம் தவிர வேறு எந்த மரத்திலுமோ, செடியிலுமோ சென்று அமராது. மூங்கில் பழங்களைத் தவிர்த்து, வேறு எதையும் உண்ணாது. சுவையான நீர்ச் சுனைகளில் மட்டுமே தாகம் தணிக்கும். வேறு எந்த நீரையும் பருகாது. இப்படி ஒரு நாள் ஃபீனிக்ஸ் பறவை வானில் பறந்து கொண்டிருக்கையில் கீழே ஒரு ஆந்தை செத்து அழுகிப் போன ஒரு எலியை சாப்பிடத் தயாராக இருந்தது. ஃபீனிக்ஸ் பறவை ஆந்தையைக் கடந்து சென்ற போது, ஆந்தை மேலே அண்ணாந்து பார்த்து, ஃபீனிக்ஸ் பறவையை விரட்டும் தொனியில் "சூ" என்றதாம். என்ன நீயும் உன் தலைமையமைச்சர் பதவியைக் கொண்டு என்னை "சூ" என்று துரத்தப் பார்க்கிறாயா என்றார்.

வெய்சு வெட்கி தலைகுனிந்தார்.

# ஹொலிவுட் எம்.ஜி.ஆர்

நடிகர் நாகேஷுக்கு மிகவும் பிடித்த நகைச்சுவை நடிகரான ஜெரி லூயி ஓர் ஏழைப் பங்காளன். தன்னைச் சேர்ந்தவர்களுக்கு "வாரி வாரி"க் கொடுப்பதற்குச் சளைக்கவே மாட்டார். ஒவ்வொரு படத்தின் முதல் படப்பிடிப்பின்போதும் பெண்களுக்கெல்லாம் மலர்க் கொத்துக் கொடுப்பார். ஆண்களுக்கெல்லாம் ஏதாவது பரிசு கிடைக்கும். செட்டில் வேலை செய்பவர்களின் மனைவியோ, தாயாரோ, மாமியாரோ உடல்நலம் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றால், அவர்களை அங்கு சென்று நலம் விசாரிப்பார். அவர்களுடைய குழந்தைகளின் பெயரில் 25 டொலர் சேமிப்புப் பத்திரங்களை வாங்கிக் கொடுப்பார். செட்டில் இருப்பவர்கள் யாருக்காவது பிறந்தநாள் என்றால், அன்று நிச்சயமாக ஒரு பார்ட்டி இருக்கும். அவரிடம் பண உதவிகேட்டு, ஏமாற்றத்துடன் திரும்பியவர்களே கிடையாது.

இதுவரை அவர் சுமார் ஆறுமில்லியன் டொலர்கள் நன்கொடையாக அளித்திருக்கிறாராம்.

# முதல் தொழில்

ஒரு பாதிரியார், ஒரு டாக்டர், ஓர் அரசியல்வாதி மூவரும் ஒருநாள் கூடிப் பேசிக்கொண்டிருந்த போது, யாருடைய தொழில் மிகவும் பழமையானது என ஒரு கேள்வி வந்தது.

"மனிதனின் முதல் செயலே பிரார்த்தனை செய்து கடவுளுக்கு தன் நன்றியைத் தெரிவித்ததாகும். எனவே என் தொழில்தான் பழைமையானது!" என்றார் பாதிரியார்.

"சுத்த அபத்தம்! கடவுள் பெண்ணைப் படைப்பதற்காக ஆணின் உடம்பிலிருந்து ஒரு எலும்பை எடுத்தார். அதுவே முதல் செயல். எனது தொழில்தான் மிகப் பழைமையான தொழில். கடவுள் பெண்ணைப் படைப்பதற்கு முன்பு உலகில் வெறும் கலவரம் மட்டும்தான் இருந்தது!" என்றார் டாக்டர்.

"சரியாகச் சொன்னீர்கள் டாக்டர்! உங்கள் வாதப்படி எனது தொழில்தான் பழைமையான தொழில்" என்றார் அரசியல்வாதி.

"எப்படி?"

"கடவுளின் அறுவைச் சிகிச்சைக்கு முன்பு உலகில் வெறும் கலவரம்தான் இருந்தது என்று நீங்கள்தானே சொன்னீர்கள்? அந்தக் கலவரத்தை என்னைப்போன்ற அரசியல்வாதி தவிர, வேறு யார் உருவாக்கியிருக்க முடியும்? எனவே, என் தொழில்தான் மிகப் பழைமையானது" என்றார் அரசியல்வாதி.

காணப்படுகின்றது. இரும்புச் சத்து நிறைந்த உணவுகளான இறைச்சி, ஈரல், சிறுநீரகம் போன்ற பகுதிகள் மீன், கருவாடு, முட்டை கரும் பச்சை இலைவகைகள், மரக்கறிகள், சோயாமீற், உழுந்து, கடலை, கௌப்பி, பருப்பு போன்றவற்றை இக்காலப் பகுதியில் உள்ளெடுக்க வேண்டும். விலங்குணவுகளில் உள்ள இரும்பே நன்கு அகத்துறுஞ்சப்படுவதால் அவற்றை உள்ளெடுப்பது சிறந்தது.. முளைக்க வைத்த விதைகளும் பருப்பு வகைகளும் (Pulse) இரும்புச்சத்து உடலினுள் சேர்வதை அதிகரிக்கின்றது.

உடற்திணிவுச் சுட்டி - எதிர்பார்க்கப்படும் (Kg/m2) நிறை அதிகரிப்பு (Kg)

- 18.5 (நிறைகுறைந்தவர்) - 12.5 - 18
- 18.5 - 24.9 ( சாதாரண நிறை) 11.5 - 16
- 25-29.9 (அதி கூடிய நிறை) 7 - 11.5
- > 30 ( மிதமிஞ்சிய நிறை) < 6.8

(Serving) பரிமாறல் அளவுகள்

- கப் - 200 மில்லிமீற்றர் அளவிலான தேநீர் கோப்பை

**தானியங்கள் மற்றும் மாப்பொருள்**

- சோறு - 1கப்
- பாண் - 1 துண்டு
- மரக்கறிகள்
- அவித்த மரக்கறிகள் 3 மே.கரண்டி அல்லது அரைக் கப் பச்சை சலட்

**பழங்கள்**

- வாழைப்பழம் அல்லது தோடம்பழம் - 01
- வெட்டிய பழக்கலவை - கப்
- உலர் பழங்கள் - 2 மேசைக்கரண்டி

**மீன், அவரை, முட்டை, கோழி, இறைச்சி**

- சமைத்த மீன் அல்லது இறைச்சி 30 கிராம்
- சமைத்த அவரைகள் - 3 மேசைக்கரண்டி
- முட்டை - 1
- உலர் மீன் 15 கிராம்

**பால் உணவுகள்**

- பால் - 01 கப்
- யோகட் - 1 கப்
- பால் மா - 2 மேசைக்கரண்டி
- கடலை அல்லது எண்ணெய் - 1 மேசைக்கரண்டி

இலங்கையில் இரும்புச் சத்து நிறைந்த உணவுப் பழக்கம் குறைவாக உள்ளதால் கர்ப்ப காலத்திலும் பாலூட்டும் காலத்திலும் இரும்புச் சத்து வில்லைகளை உள்ளெடுப்பது அவசியம் மேலும் இவற்றுடன் தேநீர், கோப்பி மற்றும் கல்சியம் மாத்திரைகளைச் சேர்த்து உட்கொள்ளக் கூடாது. இரும்புச் சத்துக் குளிசைகளை வெறும் வயிற்றில் எடுப்பது நல்லது. இக்குளிசைகளுக்கு வாந்தி வருவது போல உள்ளவர்கள் சாப்பிட்ட உடனே உள்ளெடுக்கலாம் இவ்வகையானவர்கள் படுக்கைக்குச் செல்லும் போதோ அல்லது பழச்சாற்றையோ உள்ளெடுப்பது பக்க விளைவுகளைக் குறைக்கும். இரும்புச் சத்துக் குளிசைகள் குழந்தை பிறந்த பின் 6 மாதங்கள் வரை உள்ளெடுக்க வேண்டும்.


**கல்சியம்**

கல்சியத்தின் தேவை கர்ப்பகாலத்திலும், பாலூட்டும் போதும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்காக மீன், இறைச்சி, முட்டை, வித்துவகைகள், பால், சீஸ், தயிர், யோகட், இலை வகைகள், மரக்கறிகள், விளாம்பழம், எள், போன்ற உணவுப் பொருள்களை உள்ளெடுக்க வேண்டும். அயடின் சேர்க்கப்பட்ட உப்பை உணவில் சேர்ப்பதால் இதன் குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம்.

(நன்றி: Jaffna Diabetic Centre)

# ஊரும் உலகமும்

## பகத்சிங்கின் பிடிவாதம்



இந்தியப் பாராளுமன்றத்தில் வெள்ளைக்கார அதிகா-ரிகள் அமர்ந்திருந்த பகுதியில் குண்டு வீசியதற்காக பகத்சிங், ராஜகுரு, சுக-தேவ் ஆகிய மூவருக்கும் 1990 ஒக்ரோபர் 7 ஆம் திகதி தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இவர்கள் தூக்குத் தண்டனைக் கைதிகளாக லாகூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

சிறையின் அதிகா-ரிகளுள் ஒருவரான சர்தார் சிங் மத நம்பிக்கையுள்ள சீக்கியர். அவர் சீக்கியர்களின் புனித நூலான "குத்கா"வை பகத்சிங்கிடம் கொடுத்து "கடைசி நேரத்திலாவது இதைப் படித்துக் கடவுளை நினைத்துக்கொள்" என்று கூறினார். தனது வாழ்நாளில் கடவுளைப் பற்றிச் சிந்திக்கவில்லை என்றும் கடைசி நேரத்தில் பகத் சிங்குக்கு பலவீனம் வந்துவிட்டது என்று மக்கள் நினைத்துவிடக் கூடாது என்றும் கூறி அதைப் படிக்க மறுத்துவிட்டார்.

அதே சிறையிலிருந்த சுதந்திரப் போராட்ட வீரர் பாபா ரந்தீர் சிங் பகத்சிங்கிடம் கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தார். அவருக்குப் பதில் கூறும் விதத்திலேயே "நான் ஏன் நாத்திகன் ஆனேன்" என்ற கட்டுரையை பகத்சிங் எழுதி-னார்.

## இலங்கையின் நண்பன் யார்?



ஆயுத உதவிகள் மற்றும் வேறு உதவிகள் மூலம் இலங்கையின் ஆயுதந் தாங்கிய தமிழ்ப் போராளிகளுக்கு இந்தியா ஊக்கமளிக்கின்றது என்ற குற்றச்சாட்டை இலங்கை அரசாங்கம் முன்வைத்த பின்னணியில் 1986 ஏப்ரல் 18 ஆம் திகதி "றேடியோ அவுஸ்திரேலியா" ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவைப் பேட்டி கண்டது. இலங்கையின் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண முயற்சிக்கும் இந்தியாவா அல்லது இலங்கைக்கு ஆயுத விநியோகம் செய்யும் பாகிஸ்தானா இலங்கையின் சிறந்த நண்பன் என்ற கேள்வி அப்பேட்டியின் போது ஜே.ஆர்.ஜயவர்த்தனவிடம் கேட்கப்பட்டது. எவ்வித தயக்கமும் இல்லாமல் பாகிஸ்தானே சிறந்த நண்பன் என்று ஜே.ஆர் பதிலளித்தார்.

## அர்த்தசாஸ்திரம்



சாணக்கியர் என்றும் கௌடில்யர் என்றும் அறியப்பட்டவரால் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட நூல் அர்த்தசாஸ்திரம். இவர் கி.மு. நான்காம் நூற்றாண்டின் முடிவில் சந்திரகுப்த மௌரியனின் பிரா-மண அமைச்சராக இருந்தவர். ஆட்சிக்கலைத் தத்துவங்கள் நிரம்பிய இந்த நூல் நீண்டகாலம் இருட்டில் இருந்த பின் 1905 ஆம் ஆண்டிலேயே வெளியுலகுக்குக் கொண்டுவரப்பட்டது. இப்போது புழக்கத்திலுள்ள பதிப்பில் மூல நூலின் நாலில் ஒன்றுக்குக் கூடுதலான பகுதி இடம்பெறவில்லை என்று வரலாற்று ஆய்வாளர் டி.டி.கோசாம்பி கூறுகின்றார்.

# வடமராட்சி மண்ணில் தனிப்புகழ் பூத்த கரவெட்டி கிராமம்

கரவெட்டி (Karaveddy) இலங்கையின் வட. மாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஒரு கிராமம். இதன் எல்லைகளாக உடுப்பிட்டி, புலோலி, கரணவாய், நெல்லியடி ஆகிய கிராமங்கள் அமைந்துள்ளன. கரவெட்டியில் நெல்லியடி, சம்மந்தர் கடையடி, கிளவி தோட்டம், யார்க்கரு, அத்துளு, கட்டைவேலி என்றவாறாக சிறு சிறு கிராமக்குடிகளை கொண்டு விளங்குகிறது. ஊர் வழக்கில் நெல்லியடியை கரவெட்டி என்று சொல்லுவதில்லை. அதை நெல்லியடி என்றே சொல்லிக்கொள்வார்கள்.

இதில் கேவளை சந்தி முன்னர் ஒரு முக்கியமான இடமாக இருந்திருக்கின்றது. ஏனென்றால் சாவகச்சேரி ஊடாக முன்னர் பஸ் ஓடிய காலத்தில் கனகம்புளியடி, கப்பூது, அந்தணதிடல் ஊடாக இந்த சந்திக்குத்தான் எல்லா பஸ்களும் வந்து போகும். அது மட்டும் இல்லாமல் யாழ்.நகரத்திலிருந்து செல்லும் புத்தூர் வழியாக வந்து கப்பூது வந்து இந்த சந்தி வந்து தான் பருத்தித்துறை செல்லும் அப்படியாக இந்த சந்தி ஒரு முக்கியமான ஒரு இடமாக விளங்கியிருந்தது என்றால் மிகையாகாது.

அதுமட்டும் இல்லாமல் இந்த சந்தியை ஆயம் என்றும் ஆயக்கடவை என்றும் ஆயச்சந்தி என்றும் சொல்வது வழமை. கரவெட்டியின் பெயர் வரக் காரணம் இந்த ஆயக் கடவை என்றும் சொல்லப்படுகிறது. அதாவது நாட்டின் உள்ளூர் வழிகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் பற்றிக் கூடிய கவனம் செலுத்திய ஒல்லாந்தர்கள் இந்த இடத்தில் கிரவெட் (Gravet) நிறுவியிருந்தார்கள். இந்த கிரவெட் (Gravet) தான் பின்னர் திரிவடைந்து



கரவெட்டியானது என்றும் ஒரு சான்று கூறப்படுகிறது. ஆனால் இன்றுவரை




சரியான ஒரு காரணம் அறியப்பட்டதாக தெரியவில்லை.

எது எப்படியாக இருப்பினும் இந்த கரவெட்டியின் தெற்கு வாயிலாக இருந்த ஆயக்கடவை அன்றும் இன்றும் ஒரு முக்கியமான தளமாக இருந்து கொண்டிருப்பது என்பது உண்மை. ஆனால் இதனூடாக பஸ் ஓட்டங்கள் தற்போது கொஞ்சம் குறைந்து விட்டன.


கரவெட்டியில் கோவில்களுக்கும் குறைவு இல்லை என்று தான் சொல்ல வேண்டும், வெல்லனிற் பிள்ளையார் கோவில்,கிளவிதோட்டம் விநாயகர் கோவில், தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் கோவில், யார்க்கரு விநாயகர் கோவில், அத்துளு அம்மன் கோவில், நுணுவில் பிள்ளையார் கோவில், சாமியன் அரசடி வைரவர் கோவில் என்று கோவில்களின் பெயர்ப் படலம் சென்றுகொண்டே இருக்கிறது.

விநாயகர் வழிபாடு, மற்றும் அம்மன் வழிபாடு இங்கு முக்கியத்துவம் பெற்று விளங்குவதோடு கிராமிய தெய்வங்கள் வழிபாடும் இங்கு காணப்படுகிறது. கரவெட்டியில் அறிவுசார் விருத்திக்காக பாடசாலைகளுக்கும் குறைவில்லை. கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம், திரு இருதயக்கல்லூரி என்று பாடசாலைகளும் விளங்குகின்றன. இந்த பாடசாலைகள் கரவெட்டியில் பல்வேறு அறிவாளி களை உருவாக்கி கரவெட்டியின் திறமைசார் பொக் கிஷங்களாக இருப்பது இங்கு நினைவு கூர வேண்டிய ஒன்று.



பிரதேச வைத்தியசாலை கரவெட்டி

மாகாண சுகாதார சிறப்பு விருது போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளி விருதை பெற்றுக்கொண்டது.



மது ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கரவெட்டி மாணவர்களின் பேரணி

## கரவெட்டி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு













# ஊடகங்களுக்கான ஒழுக்க நெறிகள்

# தேர்தல்கள்-ஆணையாளரால் அறிவிப்பு



தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடும் தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் எந்தவொரு கட்சி அல்லது சுயேட்சைக்குழுவுக்கும் வேறுபாடு காட்டக் கூடாதென தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அவ்வாறே தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு கட்சி அல்லது சுயேட்சைக் குழுவுக்கு என விசேட பிரசாரங்களை முன்னெடுத்தல் அல்லது தனிப்பட்ட ரீதியாக பாதிப்பு ஏற்படும் விதத்தில் செயற்படுதலை தவிர்க்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இம்முறை நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கான பிரசாரத்தில் ஊடகங்களுக்கு ஒழுங்கு விதிகளை குறிப்பிட்டு தேர்தல்கள் ஆணையாளர் வெளியிட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கமொன்று சமநிலைத் தன்மை அற்று குழப்பநிலையை கொண்டதாக அமைந்திருப்பின் அதனை இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பிரசாரம் செய்வது தவிர்க்கப்படவேண்டும்.

அவ்வாறான பிரசாரமொன்றினால் பாதிக்கப்படும் தரப்பினர் தமது மாற்றுக்கருத்தினை குறித்த ஊடகம் மூலம் பிரசாரம் செய்ய வாய்ப்பை வழங்குதல் வேண்டும்.

இவ்வாறான செய்தி ஊடகங்களில் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குபவரின் தனிப்பட்ட அவரது விளக்கம் ஒரு தரப்பை ஊக்குவிப்பதாகவும் பிறிதொரு தரப்பை தாழ்த்துவதாகவும் அமைந்தால் அவ்வாறான பிரசாரம் தவிர்க்கப்படுவது அவசியம்.

தேர்தலுக்கான் பிரசார காலப பகுதியில் பிரசாரம் தொடர்பில் சட்டரீதியற்ற அறிவித்தல்களை வெளியிடுதல் மற்றும் பக்கச்சார்பான ஒலி, ஒளி பரப்பு நிகழ்சிகளை நடாத்துவதும் தவிர்க்கப்படவேண்டும்.

தேர்தல் பிரசாரத்துக்கான ஒரு விரிவான நிகழ்ச்சி அல்லது விசேட நிகழ்ச்சியொன்றினை தயாரித்து வழங்கும் போது பிரதியாக்குனர், அறிவிப்பாளர், மற்றும் நிகழ்ச்சித் தயாரிப்பாளரின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டுமெனவும் தேர்தல்கள் ஆணையாளரின் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மாணவியின் பின்னால் அலைந்தவர் மர்மமான முறையில் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலையில் கல்வி கற்று வரும் மாணவியின் பின்னால் ஆட்டோவில் பின்தொடர்ந்து அலைந்து திரிந்தவர் மர்மமான முறையில் தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வாரம் கோண்டாவில் மேற்கில் உள்ள முத்தட்டு மட வீதியில் மாலை வேளை நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

மேற்குறித்த முகவரியில் வசித்துவரும் மாணவியொருவர் யாழிலுள்ள பிரபல்யமான பாடசாலையில் கல்வி கற்பதற்காக காலை, மாலை பேருந்தில் சென்றுவருவது வழக்கம். முத்தட்டு மடம் வீதியிலிருந்து கே.கே.எஸ் வீதிக்கு வந்து பேருந்தில் சென்று வருவதை வழமையாகக் கொண்டிருந்த மாணவியை ஆட்டோவில் இளைஞர் ஒருவர் தினமும் பின் தொடர்ந்து வந்து தொல்லை கொடுத்ததாகவும் இதுபற்றி மாணவி தந்தையிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவ்வாறு பின்தொடர்ந்து வந்த வேளை வேறு ஒரு ஆட்டோவில்வந்த இளைஞர்களால் மர்மமான முறையில் இவர் தாக்கப்பட்டிருந்தார் எனவும் ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தின் பின்னர் அந்த மாணவியின்பின்னால் தொடர்ந்து வந்து தொல்லை கொடுக்கும் சம்பவம் இடம் பெறுவதில்லையெனவும் ஊர்மக்கள் தெரிவிக்கின்றனர். (06)


# வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் (ஞாயிற்றுக்கிழமை) மு.ப 10 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணம் இல.82 நாவலர் வீதியில் அமைந்துள்ள சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் அறிவகம் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் இவ் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கணக்கு மற்றும் ஆண்டறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டு புதிய நிர்வாகசபை தெரிவும் இடம் பெறுமென கழகத்தின் செயலாளர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வெள்ளி நற்சிந்தனை...



# தர்மத்திற்கு உருவம் இரண்டு (04)

மகாபாரதமும் மனிதனுடைய வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குகிறது. மனிதனுடைய பிரபஞ்ச வாழ்வே ஒரு போராட்டம்தான். மனிதனுடைய உடல் குருஷேத்திர பூமி மனிதனிடத்து நல்ல இயல்புகள் பாண்டவர் போன்று மிகச்சில கெட்ட இயல்புகளோ கௌரவர்கள் போன்று பல இரண்டு வித இயல்புகளும் மனிதனிடத்தே தோன்றியவைகளாதலால் அவைகள் தாயாதிகள்.

ஸ்ரீ கிருஸ்ணன் என்னும் பரமாத்மா எல்லார் உள்ளத்திலும் சாரதியாய் வீற்றிருக்கின்றார். அவர் ஆயுதம் எடுத்துப் போர் புரியவில்லை. ஆனால் அவருடைய அருள் நல்லோர்க்கே உரியதாகிறது. தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையே உள்ள போராட்டத்தில் தர்மம் இறுதியில் வெல்கிறது. மனிதன் தர்மவானாயிருந்து அதர்மத்தை வென்ற பிறகு பரமனை அடையவேண்டும்.

வாழ்க்கையின் சிக்கலான பிரச்சினைகளெல்லாம் இவ்விரண்டு இதிகாசங்களின் வாயிலாக விளக்கம் பெறுகின்றன.

வைராக்கிய உள்ளம் படைத்தவர்கள் உலகம் தரும் சுகத்தில் நாட்டம் கொள்வதில்லை. அவர்கள் உலகத்தில் போகம் அனுபவிக்க விரும்புவதில்லை. அவர்கள் தங்கள் வாழ்க்கையில் அமையும் வசதிகளையெல்லாம் பிறர் நலனுக்காகப் பயன்படுத்துகின்றனர். தங்களுக்கென்று அவ்வசதிகளைப பயன்படுத்திக் கொள்வதில்லை. அவர்களுக்கு இப்பிரபஞ்சம் இனிய பாதையாகவே இருக்கிறது. இருந்தும் உலகிலிருந்து விலகி தங்களை வருத்திக் கொள்ளும் நிலையில் பரவாழ்வு வாழத தொடங்குகின்றனர்.

பரமன் பிரபஞ்ச மயமாக விளங்குகின்றான். அப்படி விளங்குகின்றவன் வாயிலாக அவனுடைய தீட்பமும் உறுதிப்பாடும் வெளியாகின்றன. காற்றாக அவன் விளங்குகின்ற பொழுது அது சூறாவழியாக வழிவெடுக்குமாயின் அதனால் மக்களுக்கு விளையும் கஷ்ட நஷ்டத்துக்கு அளவில்லை. சான்று ஒன்றைப் பார்ப்போமாயின், மக்கள் பெரும் சிரமப்பட்டு வாழை சாகும்படி பண்ணுகிறார்கள். இன்னும் சில வாரங்களில் அச்சாகுபடியிலிருந்து ஏராளமான வருமானம் பெறுவார்கள். ஆனால் வாயு பகவானுடைய போக்கை யாரோ அறிய வல்லவர், ஒரு நொடிப் பொழுதில் அத்தனை வாழை மரங்களையும் முறித்துப் பாழ்படுத்தும் வல்லமை அவனுக்கு உண்டு.

(தொடரும்)

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கைப் பலத்தை அதிகரிப்பதன் மூலமே தமிழர்கள் தமது பேரம் பேசும் சக்தியை அதிகரிக்க முடியும் என்று சம்பந்தன் ஐயா கூறுகின்றார். கேள்வி என்னவெனில் - எதனைப் பேரம் பேச என்பதாகும். சேனாதிராஜா, சித்தார்த்தன், அடைக்கலநாதன், பிரேமச்சந்திரன் போன்றவர்கள் பேசும் தீவிர நிலைப்பாட்டு கொள்கையையா...? அல்லது ஐயாவும் சுமந்திரனும் முன்னெடுக்கும் மிதமான நிலைப்பாட்டுக் கொள்கைகளையா...? வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்கப் போகும் மக்கள், இந்த இரண்டு கொள்கைகளில் எந்தக் கொள்கையைக் கூட்டமைப்பின் கொள்கை என ஏற்று வாக்களிக்க முடியும்...?

சம்பந்தன் ஐயாவும் சுமந்திரனும் மட்டுமே இணக்க–அரசியல் பேசுகின்றார்கள். தமது இந்த நட்பு–அரசியல் வழிமுறையைத் கூட்டமைப்பின் ஏனைய ஆட்களை ஏற்றுக்கொள்ள வைக்கவே அவர்களால் முடியவில்லை. ஏனெனில் - வீராவேசக் கதைகள் பேசித் தாமே உணர்ச்சியூட்டிவிட்ட தமிழ் மக்களிடம், இந்த இணக்க–அரசியலைக் கொண்டு செல்லக் கூடிய தற்துணிவோ, விருப்பமோ தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எந்த ஒரு வேட்பாளருக்கும் கிடையாது. அதனால் - ஐயாவையும் சுமந்திரனையும் தவிர்ந்த் ஏனைய தலைவர்கள் எதிர்ப்பு-அரசியலையே தொடர்ந்தும் பேசுகின்றார்கள். சிங்கள-எதிர்ப்பு -அரசியல் பேசி சனங்களை உசுப்பேத்தி வாக்குப் பெறுவதே அவர்களுக்கும் சுலபமானது. எனவே - எதைப் பேசியென்றாலும் 20 ஆசனங்களை வெல்லட்டும் என்று ஐயாவும் விட்டு விட்டார்.

ஏனைய தலைவர்கள் எதிர்ப்பு-அரசியல் பேசி வாக்குப் பெற்ற பின்பு, அதில் கிடைக்கும் 20 ஆசனங்களை வைத்து இணக்க–அரசியல் செய்யப் போகின்றார்கள் ஐயாவும் சுமந்திரனும். இதுதான் சுத்துமாத்து அரசியல். இந்தச் சுத்துமாத்து அரசியலின் இன்னொரு மோசமான விளைவு என்னவெனில் - வடக்கு கிழக்கில் தமிழ் இனவாதத்தை உசுப்பேத்திப் பெற்ற வாக்குகளினால் வென்றெடுத்த நாடாளுமன்ற ஆசன எண்ணிக்கையை வைத்துக்கொண்டே ஐயாவும் சுமந்திரனும் தம்மிடம் இணக்க–அரசியல் பேசிக்கொண்டு வருகின்றார்கள் என்பது சிங்களத் தலைவர்களுக்கும் தெரியும். அது இந்தியாவுக்கும் புரியும், அமெரிக்காவுக்கும் விளங்கும். அதனால் - தமிழர் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு என்று வரும் போது, நாம் கேட்பதைத் தருவதற்குப் பதில், தாம் தருவதையே ஏற்றுக்கொள்ளச் சொல்லுவார்கள். உண்மையில் எங்களால் எந்த பேரமும் பேச முடியாது....

வடக்கின் தெருக்களில் பேசுகின்ற எந்த ஒரு தமிழரிடமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாகக் கூறுவதற்கு நல்ல விசயங்கள் எதுவுமே இல்லை. கதைக்கின்ற ஒவ்வொருவருமே கூட்டமைப்பு மீது குற்றங்களை அடுக்குவோராகவும், குறைகளைக் குவிப்போராகவுமே உள்ளார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கூட, வேறு கட்சிகள் பற்றிய குறைகளை விடவும் அதிகமாகத் தமது சொந்தக் கட்சி ஆட்கள பற்றிய அதிருப்திகளையே பேசுகின்றார்கள். இத்தகைய பின்னணியில் - தமிழ் மக்கள் தங்கள் சிந்தனைக்குள் தெளிவான ஒரு விடயத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். கூட்டமைப்பின் கடந்த காலச் செயற்பாடுகளில் துளியள்வேனும் திருப்தி இல்லையெனில், கடந்த காலத்தைப் போலவே இந்த தடவையும் வீட்டுச் சின்னத்திற்கே வாக்களிக்கலாமா...?

ஆனால், சம்பந்தன் ஐயா இப்போது கடைசி வாய்ப்புக் கேட்கிறார். 67 ஆண்டுகால தமிழர் பிரச்சினைக்கு ஒரே ஆண்டில் தீர்வினைத் தருவேன் என்கிறார். 20 ஆசனங்களைத் தனக்குத் தரும்படியும், இறுதித் தீர்வினைத் தான் தருவேன என்றும் சொல்கின்றார். ஐயா இதனை எப்படிச் செய்து முடிப்பார் என்பது எனக்குப் புரியாத புதிர். ஆனால், அவர் அதனைச் செய்து முடிப்பாரெனின், தமிழர் வரலாற்றில் நிலைக்கப்போவது செல்வநாயகமோ, பிரபாகரனோ அல்லவே அல்ல - சம்பந்தன் ஐயா மட்டுமே. எனவே, ஒரே ஒரு கடைசி வாய்ப்பினைத் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குக் கொடுக்கலாம் என முடிவெடுத்து இந்த ஆண்டும் வீட்டுச் சின்னத்திற்கே மக்கள் வாக்களிக்கலாம்.

ஆனால், அவ்வாறு வாக்களித்த பின்பு, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குக் கூட்டமைப்பு தொடர்பாக எந்தக் குறையும் கூறிப் புறணி பாடக் கூடாது. அடுத்த ஆண்டில் தமிழர்களுக்கான தீர்வினை ஐயா வாங்கித் தந்தாலும், தராவிட்டாலும், நாம் எந்தக் கேள்வியும் கேட்கக்கூடாது. "ஏமாற்றிவிட்டார்களே!" என்று புலம்பக்கூடாது. ஆகஸ்ட் 17 அன்று வீட்டுச் சின்னத்திற்கு எதிரே புள்ளடி இடுகின்ற எவரும் - அடுத்த ஆண்டு ஐயா எடுத்துத் தரப்போகின்ற இறுதித் தீர்வின் வரலாற்றுப் பங்காளிகள் ஆகின்ற அதேவேளையில், அப்படி ஐயா தீர்வு எதனையும் எடுத்துத் தரவில்லையெனில் - அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு கூட்டமைப்பினர் மீது குற்றம் காணும் தார்மீக உரிமையை இழந்தவர்களாகவும் ஆகிறார்கள். - தி.பரந்தாமன்

# போதைப்பொருள் கடத்தலைக் கண்காணிக்கும் மத்திய நிலையம் இலங்கையில்

(கொழும்பு)

தென் இந்திய கடற்பரப்பினூடாக மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் கடத்தலை கண்காணிக்கும் மத்திய நிலையமொன்று இலங்கையில் நிறுவப்படவுள்ளதாக தேசிய அபாயகர மருந்து கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் டாக்டர் நிலங்க சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்தே போதைப் பொருள் கடத்திவரப்படுகின்றது.

இந்தியா-இலங்கைக்கு இடையிலான போதைப் பொருள் பரிமாற்றம் பெரும்பாலும் தென் இந்திய கடற்பரப்பினூடாகத் தான் மேற்கொள்ளப்படுகிறது. இதைத் தடுப்பதற்காகவே பிராந்திய தகவல் நிலையமொன்றை அமைப்பதற்கான திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக இந்தியா விஷேட ஒத்துழைப்பை அளித்துவருகின்றது.

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்படும் போதைப் பொருட்கள் மீனவப் படகுகள் மூலமே இலங்கைக்குள் கொண்டுவரப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இந்திய கடற்பரப்பினூடாக முன்னெடுக்கப்படும் போதைப் பொருள் கடத்தலை தடுக்கும் நோக்குடன், இந்தியா, பாகிஸ்தான் , நேபாளம், பர்மா, மாலை தீவு மற்றும் இலங்கைக்கு இடையில் பிராந்திய ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்படும்.

மேலும், இந்தியாவின் உதவியுடன் ஆசிய தகவல் பரிமாற்ற சபை ஒன்றை இலங்கையில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள போதைப் பொருள் வர்த்தகர்கள் ஆட்சியில் உள்ள அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்பை பேணுகின்றனர் இந்த நிலை மாறினால்தான் போதைப் பொருள் வர்த்தகத்தை முழுமையாகத் தடுக்க முடியும். என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வாக்காளர் அட்டைகள் விநியோகம் ஆரம்பம்

(கொழும்பு)

நாடாளுமன்ற தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகம், நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டு தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கென தேர்தல்கள் செயலகத்திடமிருந்து நேற்றுதினம் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள், தபால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டன.

இவ் விநியோக நடவடிக்கையானது, எதிர்வரும் 10ஆம் திகதியுடன் நிறைவடையுமென தபால் மா அதிபர் ரோஹண அபேரத்ன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஆகஸ்ட் 2ஆம் மற்றும் 9ஆம் திகதிகள், வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் விஷேட தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலுக்காக 16 மில்லியன் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்கு திட்டமிட்டுள்ள நிலையில், தற்போது அதில் 14 மில்லியன் வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டு நிறைவடைந்துள்ளதாக அரசாங்க அச்சகர் காமினி பொன்சேக்கா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்தை நடாத்தும் ஆற்றல் ரணிலுக்கு கிடையாது

## பவித்திரா வன்னியாராச்சி தெரிவிப்பு



(கொழும்பு)

வெள்ளைக்காரர்களுக்கு தேவையான வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை ஆட்டுவிக்கப் பார்க்கின்றார் என முன்னாள் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் அரசாங்கம் நடத்தக்கூடிய தலைவர் கள் இருந்தார்கள். எனினும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அரசாங்கமொன்றை நடாத்தக் கூடிய ஆற்றல் கிடையாது.

கிராம மக்களின் வேதனைகள் ரணில் விக்கிரமசிங்கவிற்கு புரியாது. கிராம மக்களின் இதயத் துடிப்பினை நாம் நன்கு அறிவோம்.


தேயிலை மற்றும் இறப்பர் ஆகியனவற்றுக்கு நல்ல விலையை பெற்றுக்கொடுக்க வேண்டுமென்பதே கிராம மக்களின் கோரிக்கையாக அமைந்துள்ளது.

அவ்வாறு இல்லாமல் வொக்ஸ்வோகன் கார் உற்பத்தி நிலையங்களை கிராம மக்கள் கோரவில்லை.


மேற்கத்தைய கொள்கைகளை அமுல்படுத்தவே ரணில் விரும்புகின்றார்.

அதற்கு நாம் இடமளிக்க மாட்டோம். வரலாற்றில் மிக சொற்ப காலத்தில் மக்களினால் வெறுக்கப்பட்ட ஒரே அரசாங்கம் இதுவாகும் என பவித்ரா வன்னியாராச்சி தேர்தல் பிரசாரக் கூட்ட மொன்றில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் - வன்னி)




சுந்தரம் குமாரசாமி



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# 96 மாடிகளைக் கொண்ட மிக உயரமான கட்டடம்

## கொழும்பில் அமைக்க இந்திய நிறுவனம் தயார்



(கொழும்பு)

இலங்கையில் 96 மாடிகளைக் கொண்ட, மிக உயரமான கட்டடத்தை கொழும்பின் ராஜகிரிய பகுதியில், இந்திய நிறுவனம் ஒன்று, அமைக்கவுள்ளது. இதற்கான உடன்பாடு நேற்று முன்தினம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

இந்தியாவின் மிகப்பெரிய ரியல் எஸ்டேட் நிறுவனமான, சிறீபதி எடிப்பிஸ் நிறுவனமே, இலங்கை முதலீட்டுச் சபையுடன் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ளது.

இதற்கமைய ராஜகிரிய, புத்கமுவ வீதியில், 96 மாடிகளைக் கொண்ட இலங்கையிலேயே மிக உயர்ந்த கட்டடம் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் கட்டிமுடிக்கப்படும்.

தரைத்தளம் மற்றும் 96 மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ள இந்த கட்டடத்தின் உயரம், 363 மீற்றராக இருக்கும்.

நான்கு துடுப்பாட்ட மட்டைகள், பந்து ஒன்றைத் தாங்கிப் பிடித்திருப்பது போன்று இந்தக் கட்டடம் வடிவமைக்கப்படும்.

இதில், 376 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், மற்றும் நீச்சல் தடாகத்துடன் கூடிய 96 உயர் அடுக்கு வீடுகளும் அமைக்கப்படும்.

அத்துடன் நான்கு திரையரங்குகள், நவீன வசதிகளைக் கொண்ட பொழுதுபோக்கு பூங்கா, வணிக நிலையம், நீச்சல் தடாகம், உள்ளிட்ட வசதிகளும் இந்தக் கட்டடத்தில் அமைக்கப்படவுள்ளது.

ஆரம்பத்தில் 330 மில்லியன் டொலர் முதலிடப்படும் இந்த கட்டடத்தை அமைக்க, மேலும் 100 மில்லியன் டொலர் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் எண்ணத்தில் உதயமான இந்த திட்டம், 1996ஆம் ஆண்டு அவரது தலைமையிலான இலங்கை துடுப்பாட்ட அணி உலக கிண்ணத்தைக் கைப்பற்றிய வெற்றியை நினைவுபடுத்தும் வகையில் அமைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

**தேர்தல் களம் 2015ம்......**

காசி ஆனந்தன் பல தடவைகள் இனவாதம் சார்ந்து சிங்கள மொழியை கொச்சைப்படுத்தும் வகையில் நண்டுக்கால் மொழி என்று வர்ணித்ததை மறக்க முடியாமலிருக்கிறது. ‘அன்றைய அத்தகைய முறைமைகளில் இருந்து மிகச் சிறிய அளவில் வேறுபட்ட, அதே வடிவத்தின் தொடர்ச்சியாக முன்வைக்கப்படும் ஒரு சொல்லாடலாக நிலாந்தனின் மென்சக்தி இருந்துவிடக்கூடாது.. மேலும் நிலாந்தனின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிமுறை என்பது பேரம்பேசுதலை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. புலிகள் ஆயுதபலத்தையும் இராணுவ நடவடிக்கைகளையும அடிப்படையாக வைத்து பேரம் பேசும் அரசியலை நகர்த்தினார்கள். விளைவு அவர்கள் நினைதததற்கு நேர் எதிர்மாறாகவே முடிந்தது! நிலாந்தனின் பேரம்பேசல் என்பது மக்களை அணிதிரட்டிய கிளர்ச்சியின் ஊடாக சர்வதேசத்தை ஈர்ப்பது. அடிப்படையில் புலிகளின் வழியில் சர்வதேசத்தை மையப்படுத்திய வழிமுறையைத்தான் நிலாந்தனும் நிலைநாட்ட முனைகிறார்.

(தொடர்ச்சி நாளைய தினமுரசில்)

# பாடசாலைகள் விடுமுறை

(கொழும்பு)

இரண்டாம் தவணைக்கான பாடசாலை கல்வி நடவடிக்கைகள் நேற்றுடன் நிறைவடைந்துள்ளன. இன்று முதல் பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைகள் நடைபெறாத பாடசாலைகள், எதிர்வரும் ஆகஸ்ட் 31ஆம் திகதி மீள திறக்கப்படும் என கல்வியமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சைகள் நடைபெறும் பாடசாலைகள் மீள திறக்கப்படும் தினம் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களை திருத்தும் பணிகள் நடைபெறும் பாடசாலைகளின் விடுமுறை நாட்களை, அதிக பட்சம் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும், அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# க.பொ.த(உ/த) மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை
# G.C.E. (A/L) Examination model Paper
## தொடர்பாடல் ஊடகக்கற்கை (communication & media studies )
பகுதி I

01. பர்லோ தொடர்பாடல் மாதிரியில் தொடர்பாடல் செயன்முறை வினைத்திறன் மிக்கதாக அமைவதற்கு அனுப்புநர் - பெறுநர் ஒத்தநிலை அம்சங்கள் சிலவற்றை குறிப்பிடுகின்றார். பின்வரும் அம்சங்களின் அவற்றில் உள்ளடக்கப்பட முடியாதது
   01) அனுப்புநர் - பெறுநர் தொடர்பு செயற்றிறன் ஒத்த நிலை
   02) அனுப்புநர் - பெறுநர் மனப்பான்மை ஒத்தநிலை
   03) அனுப்புநர் - பெறுநர் அறிவு ஒத்த நிலை
   04) அனுப்புநர் - பெறுநர் நடத்தை ஒத்த நிலை
   05) அனுப்புநர் - பெறுநர் தொடர்பு கலாசார ஒத்த நிலை

02. பேச்சு, கொந்நிலை, நடத்தைக் கோலம் இணைவதால்
   01) உரையாடல் செயன்முறை உருவாதல்
   02) ஆற்றுகைச் செயன்முறை உருவாதல்
   03) பிரதியாக்க செயன்முறை உருவாதல்
   04) விபரணச் செயன்முறை உருவாதல்
   05) பேச்சு செயன்முறை உருவாதல்

03. இலத்திரனியல் ஊடகங்களின் நேர அவகாசத்திற்கு ஏற்ப மொழியை சுருக்கமாக பயன்படுத்தல்
   01) மொழியின் ஏற்புடமை அடிப்படையில்
   02) மொழியின் மட்டுப்பாட்டின் அடிப்படையில்
   03) மொழியின் தாக்கத்தின் அடிப்படையில்
   04) மொழியின் ஏற்புடமையின்மையின் அடிப்படையில்
   05) மொழியின் பரவல் வீச்சின் அடிப்படையில்

04. "பாடப்புத்தகம் ஒன்றில் உள்ள விடயதானங்களை விளங்கிக் கொள்கின்ற முயற்சி" தொடர்பாடல் செயன்முறையில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது
   01) குறிமுறைய விழ்ப்புச் செயன்முறை
   02) குறிமுறையாக்கச் செயன்முறை
   03) வியாக்கியானச் செயன்முறை
   04) பின்னூட்டல் செயன்முறை
   05) பரிமாற்ற அல்லது கடத்தல் செயன்முறை

05. இசைந்து வாழ்தல் எண்ணகருவுடன் தொடர்பற்றது
   01) சுயகௌரவம் 02) புரிந்துணர்வு
   03) சுயநலமின்மை 04) விட்டுக்கொடுப்பு
   05) பொறுமை

06. பின்வருவனவற்றுள் ஒளி, ஒலி தெறிப்பு செயன்முறை இடம்பெறுகின்ற ஊடக உபகரணங்களை காட்டும் தொகுதி
   01) ஒலிபெருக்கி பக்கப்புரட்டி
   02) மேந்தலை எறிவை, பல்லூடக எறிவை
   03) துரித எறிவை, பல்லூடக எறிவை
   04) பல்லூடக எறிவை, ஒலிபெருக்கிக்கருவி
   05) வழுக்கி எறிவை, துரித எறிவை

07. ஷெனோன் வீவர் தொடர்பாடல் மாதிரியில் தகவல் சென்றடையும் இடம் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது
   01) பெறுகை 02) பெற்ற சமிக்ஞை
   03) தாக்கம் 04) விளைவு
   05) உச்சஸ்தானம் (Destination)

08. காந்தி, ராஜாராம், மோகன்ராஜ், ராஜாஜி போன்றோர் பல இதழ்களை வெளியிட்டமையுடன் தொடர்புபட்ட முக்கிய பணியாக அமையக்கூடியது
   01) இலக்கியப்பணி 02) சமய பிரசாரப்பணி
   03) சமுகச்சீர்திருத்தப்பணி 04) செய்தி பரப்பும் பணி
   05) விமர்சனப் பணி

09. முரண்பாட்டு சூழ்நிலை உருவாவதற்கு ஏற்புடைய கலாசாரமாக அமையக் கூடியது
   01) அறிவு சமுக கலாசாரம்
   02) வெகுசன ஊடக கலாசாரம்
   03) மேலைத்தேய கலாசரம்
   04) கீழைத்தேய கலாசாரம்
   05) பல்லிசச்சமுக கலாசாரம்

10. பின்வருவனவற்றுள் பொதுமக்கள் தொடர்பு (public Relation) நோக்கத்தை பிரதிபலிப்பது
   01) மக்கள் குழுவிடம் பயனுறுதிமிக்க தொடர்புகளை பேணுதல்
   02) முறைசார் நிதிமுகாமையை பேணுதல்
   03) வெகுசன ஊடகங்களை நன்றாக பயன்படுத்துதல்
   04) பல்வேறு தரப்பினரிடம் பொறுப்புக்களை கையளித்தல்
   05) திட்டத்தை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்

11. எவடம் எவடம் புளியடி புளியடி "போடி போடி புத்தி கெட்ட சம்பந்தி" மேற்படி நாட்டார் பாடல்கள் எவ்வகைக்குரியன
   01) தாலாட்டு பாடலுக்குரியன
   02) விளையாட்டு பாடலுக்குரியன
   03) தொழில் பாடலுக்குரியன
   04) கூத்துப்பாடலுக்குரியன
   05) நையாண்டி பாடலுக்குரியன

12. ஊடகம் அரசின் ஆதிக்கத்திற்குட்பட்டது அரசையும் பத்திரிகையும் பிரிக்க முடியாது தொழிலாளர் நல விடயம் முதன்மைப்படுத்தப்படல் மேற்படி கருத்தியலுக்குப் பொருத்தமான தொடர்பாடல் எண்ணக்கரு
   01) ஜனநாயக தொடர்பாடல் எண்ணக்கரு
   02) அபிவிருத்தி தொடர்பாடல் எண்ணக்கரு
   03) சோவியத் பொதுவுடமை தொடர்பாடல் எண்ணக்கரு
   04) ஆதிக்க தொடர்பாடல் எண்ணக்கரு
   05) சமூக பொறுப்பு தொடர்பாடல் எண்ணக்கரு

13) நோக்கங்களை அடிப்படையாக கொண்டும், பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டும், உடன்பாட்டினை எட்டவும் பயன்படும் தொடர்பாடல் வகை
   01) கூட்டுத்தொடர்பாடல் 02) நபரகத்தொடர்பாடல்
   03) நபரிடைத் தொடர்பாடல் 04) வெகுசன தொடர்பாடல்
   05) நிறுவனத்தொடர்பாடல்

14) "காட்சி என்பது பகுதி பகுதியாக அன்றி முழுமையாக இடம்பெறுதல், பிரச்சினையை முழுமையாக அவதானித்தல் ஆகியன கற்றலுக்கு அடிப்படையானது எனக் கூறிய கல்வி கோட்பாட்டாளர்
   01) கோலர் 02) பர்லோ
   03) ஸ்கின்னர் 04) வாட்சன்
   05) தோண்டைக்

15) ஒவ்வொரு அம்சத்திற்குரிய பொருத்தமான தகவலை ஒன்றாக்குதல், ஞாபகப்படுத்தல் செயன்முறையில் பின்வருமாறு அழைக்கப்படுகிறது
   01) எண்ணக்கரு படவாக்கம்
   02) மீட்டல்
   03) தகவல்களை கோர்த்தல்
   04) தகவல்களை ஒழுங்கமைத்தல்
   05) சட்டகத்தினுள் உள்ளடக்குதல்

16) ஊடக கலாசாரம் - வர்த்தக செயன்முறை ஆகியவற்றுடன் தொடர்புபடாத அம்சம்
   01) ஊடக கலாசாரத்தை தேவைக்கு ஏற்ப கையாள வர்த்தக செயன் முறையால் முடியும்
   02) ஊடகங்கள் வர்த்தக செயன்முறையின் செல்வாக்குக்கு கீழ் இயங்குதல்
   03) ஊடக உள்ளடக்கங்கள் - வர்த்தக ஆதிக்கத்திற்கு உட்பட்ட வகையில் செம்மைப்படுத்தப்படுகிறது
   04) ஊடக கலாசாரத்தை தீர்மானிப்பதில் வர்த்தக செயன்முறை இரண்டாம் நிலையில் செல்வாக்குச் செலுத்துகிறது
   05) வர்த்தக ஆதிக்கத்திற்கு அப்பால் ஊடகங்களுக்கு சுயாதீன நிலைப்பாடு கிடையாது

17) தொடர்பாடல் சந்தர்ப்பத்தில் பல்வேறு இடையூறுகள் உருவாகின்றன பின்வருவனவற்றுள் தடையாக கொள்ள முடியாதது
   01) மொழிசார் தெளிவின்மை
   02) ஆயத்த நிலை
   03) தப்பபிப்பிராயம்
   04) செய்திப்பரிமாற்றத்தின் மந்தநிலை
   05) மிகை ஒலி

18) பத்திரிகை நிறுவனம் ஒன்றின் செம்மையாக்கல் பிரிவுக்கு கிடைத்த கையெழுத்து செய்திப்பிரதியில் எழுத்து மற்றும் இலக்கண வழுக்களுடன் பல்வேறு வசனங்கள் காணப்பட்டன பின்வருவனவற்றில் சரியான வசனத்தை தெரிவு செய்க
   01) பலர் ஒன்று கூடினர் அங்கே
   02) பரிசோதனையின் பெறுபேறு வெற்றிகரமாக அமைந்தது
   03) நான் தொலைபேசியை எடுத்தேன் என்னுடன் பேச
   04) நீங்கள் விளங்கி கொண்டார்கள் யார் அவர்கள் என்று
   05) அவர்கள் வந்தனர்: எம்முடன் பேசுவதற்கு

19) வெகுசன ஊடக செய்தி அறிக்கையிடல்கள் முரண்பாட்டு நிலைமைகளை தோற்றுவிக்கின்றன இதனடிப்படையில் செய்தி ஒன்றின் செம்மை மற்றும் துல்லியம் தீர்மானிக்கப்படுவது
   01) செய்தி நிருபர் ஒருவரின் எழுத்தாற்றலில்
   02) செய்தி நிருபரின் விவேகத்தில்
   03) செய்தி ஆசிரியரின் விவேகத்தில்
   04) செய்தி தெரிவு செய்கின்ற ஆசிரியரின் திறமையில்
   05) செய்தி நிருபர் தெரிவு செய்கின்ற தகவல் மூலாதாரங்களில்

20) சீன அபிவிருத்தி தொடர்பாடல் கட்டமைப்பில் மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரித்தல் திட்டத்துடன் மேலும் ஐந்து உப திட்டங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டன பின்வரும் உபதிட்டங்களில் உள்ளடங்காத திட்டமாக அமைவது
   01) அதிகாரவர்க்க பலத்தை இழிவளவாக்குதல்
   02) அதிகார வர்க்க பலத்தை உயர்மட்டத்தில் பேணுதல்
   03) நல்லொழுக்கத்தை உறுதிப்படுத்தல்
   04) மக்கள் - அரசு இடைவெளியை குறைத்தல்
   05) மொழிமயவாக்கத்திற்கு அடிமைப்படாதிருத்தல்

21) அபிவிருத்தி தொடர்பியலுக்கான இருபடிமுறை கட்டமைப்பை முன் வைத்தவர்
   01) டேயினல் லேனர்
   02) வில்பர் ஷ்ராம்
   03) எவரெட் எம்.ரோஜஸ்
   04) ஹல்ட் லஸ்வெல்
   05) போல் பீ ஸ்டீவன்

22) வானொலி ஊடக ஆய்வு ஒன்றின் மூலம் எதிர்பார்க்கக் கூடிய அனுகூலம் அல்லாதது
  01) நேயர்கள் வானொலி நிகழ்ச்சியில் பங்கு கொள்ள முடியும்
  02) செவிமடு வலயம் என்னவெனக் கண்டறிய முடியும்
  03) செவிமடுப்போரின் மனப்பாங்கை அறிய முடியும்
  04) செவிமடுப்போரின் விருப்பு வெறுப்பை விளங்கிக் கொள்ள முடியும்
  05) வானொலி நிறுவன செயற்பாட்டு உள்ளடக்கத்தை மாற்றிமைக்க முடியும்

23) தேசிய அபிவிருத்திக்கான நெடுஞ்சாலை ஒன்றை நிறுவுவது தொடர்பான நிகழ்வை எல்லா ஊடகங்களுக்கும் அறிவிப்பதற்காக பத்திரிகையாளர் மாநாடு (Press conference) ஒன்றை நடாத்த ஆலோசிக்கப்பட்டது அவற்றுள் மிகக்குறைந்த முக்கியத்துவம் கொண்டமைந்த கூற்று
  01) எல்லா ஊடகங்களுக்கும் ஒரே இடத்தில் அறிவிப்புக்களை வழங்க இயலும்
  02) எல்லா ஊடகவியலாளர்களும் ஒரே இடத்தில் கேள்வி கேட்க இயலும்
  03) எல்லா ஊடகங்களும் ஒரே செய்தியை அறிக்கையிட இயலும்
  04) எல்லா ஊடகவியலாளர்களுடைய கருத்துக்களையும் ஒரே இடத்தில் பெற இயலும்
  05) எல்லா வகை ஊடக நிறுவனங்களுக்கும் பொதுவாக தகவல்களை வழங்க இயலும்

24) சினிமா, விளையாட்டு போன்ற துறைகளில் மிகச் சிறப்பாக உள்ள நபர்களையும் பிரபல்யம் மிக்க நபர்களையும் ஊடக நிறுவனங்கள் விளம்பர தேவைக்காக பயன்படுத்திக் கொள்வதற்கு மிக முக்கிய காரணியாக அமைவது
  01) பிரபல்யங்களின் பிரதி விம்பத்தை கட்டியெழுப்புதல்
  02) பிரபல்யங்களின் திறமையினை அறிமுகம் செய்தல்
  03) பிரபல்யங்களின் திறமையினை ஒப்பீடு செய்தல்
  04) பிரபல்யங்களின் பிரதிவிம்பத்தை மதிப்பீடு செய்தல்
  05) பிரபல்யங்களின் பிரதிவிம்பத்தை விற்பனை செய்தல்

25) தமயந்தி வெகுசன ஊடகங்களில் தனக்குத் தேவையான நிகழ்ச்சிகளை மட்டும் தெரிந்தெடுத்து இரசிக்கின்றவர் ஆகவே அவர் வெகுசன ஊடகங்களை
  01) ஊடக ஆய்வு அடிப்படையில் பயன்படுத்துகின்றார்
  02) ஊடக கல்வி அடிப்படையில் பயன்படுத்துகின்றார்
  03) ஊடக விமர்சன அடிப்படையில் பயன்படுத்துகிறார்
  04) ஊடக வாயிற்காத்தல் அடிப்படையில் பயன்படுத்துகிறார்
  05) ஊடக நியமங்களுக்கு ஏற்ப பயன்படுத்துகிறார்

26) A - செய்திகளை அல்லது தகவல்களை தவறாகப் புரிந்து கொள்ளுதல் செய்தியை செம்மையாக அறிக்கையிடுவதனால் தவிர்க்கப்படுகின்றது
  B - தொடர்பாடல் இயங்குதன்மைக்கு உட்பட்டது
  C - தொடர்புபாடுபவர் - பெறுநர் நிலை மாற்றமடையக் கூடியது அதே வேளை அவற்றின் நிலையை திடமாக வரையறை செய்ய முடியாது
  D - தொடர்பாடலின் முக்கிய இலக்கு பெறுநரிடம் தாக்கத்தை உருவாக்குதல் மேற்படி தொடர்பில் செயன்முறை பற்றிய கூற்றுக்களில்
  01) A, B ஆகியன மாத்திரம் சரியானவை
  02) A, D ஆகியன மாத்திரம் சரியானவை
  03) B, C, D ஆகியன மாத்திரம் சரியானவை
  04) A, B, D ஆகியன மாத்திரம் சரியானவை
  05) A, B, C, D ஆகியன எல்லாம் சரியானவை

27) ஆளிடைத்தொடர்பின் மூலம்
  01) பெரிய குழுவான மக்கள் குழுவுடன் தகவலை பரிமாற வாய்ப்பு உருவாகும்
  02) சுகதுக்கங்களை பகிர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்
  03) சிறந்த பேச்சாளராக உருவாக வாய்ப்பு ஏற்படும்
  04) தன்னை சுயமதிப்பீட்டுக்கு உட்படுத்த முடியும்
  05) அங்கத்தவரை கவர்வதற்கு பல்வேறு நுட்ப முறைகளை கையாள முடியும்

28) அனர்த்த ஆபத்தை மக்களுக்கு அறிவிப்பதற்கு மிகப் பொருத்தமான தொடர்பாடல் வழிமுறையை தொடர்வரிசைக்கிரமத்தில் கொண்ட தொகுதி
  01) வானொலி, குறுஞ்செய்தி, இணையம்
  02) இடர் அபாய சைரன்வானொலி, குறுஞ்செய்தி
  03) வானொலி, இடர் அபாய சைரன்ஒலி, இணையம்
  04) இணையம், வானொலி, குறுஞ்செய்தி
  05) குறுஞ்செய்தி, இடர் அபாய சைரன் ஒலி, இணையம்

29) நவீன தொடர்பாடல் தொழில்நுட்பத்தினால் உலகம் சுருங்கிக் கொண்டிருப்பதாகவும் முழு உலகும் ஒரு மானிட கிராமமாக மாற்றம் பெற்று வருவதாக குறிப்பிடுகின்றார்
  01) பீ. மலினோவுஸ்கி  02) ரல்ப் லிண்டன்
  03) மாவுல் மக்லுஹன்  04) எட்வர்ட் டெய்லர்
  05) வில்பர் ஷராம்

30) Education + Entertainment = Edutainment குறிப்பது
  01) கல்வியையும் இரசனையுணர்வையும் இணைத்தல்
  02) கல்வியையும் கட்டுருவாக்க சிந்தனையையும் இணைத்தல்
  03) கல்வியையும் பொழுதுபோக்கு நிகழ்ச்சியையும் இணைத்தல்
  04) கல்வியையும் அழகியல் உணர்வையும் இணைத்தல்
  05) கல்வியையும் அபிவிருத்தி சிந்தனையையும் இணைத்தல்

31) ஊடகங்களின் செயற்பாடுகளை விஞ்ஞான முறையூடாக ஆராய்கின்ற செயன்முறை ஊடக ஆய்வுக்குட்பட்டதாகும். பகுப்பாய்வின் ஊடாக இனங்காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு அவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகள் முன்வைத்தல் செயற்பாடு பின்வருமாறு அழைக்கப்படும்
  01) தகவல் சேகரித்தல்  02) தகவல் பகுப்பாய்வு
  03) மதிப்பீட்டு செயன்முறை  04) பிரச்சினை இனங்காணல்
  05) முன்மொழிவுகள்

32) ஊடகம் ஒன்றில் ஒளிபரப்பாகிய நிகழ்ச்சி ஒன்றின் கதையை விமர்சித்தல் செயன்முறை ஊடக விமர்சன அடிப்படையில்
  01) ஆக்கியோனை விமர்சித்தல்
  02) ஊடக உள்ளடக்கத்தை விமர்சித்தல்
  03) ஊடக தயாரிப்பை விமர்சித்தல்
  04) பெறுநர்களை விமர்சித்தல்
  05) ஊடக தாக்கத்தை விமர்சித்தல்

33) வளம் சீராக பகிரப்படாத போதிலும், இரு குழுக்களிடையே தொடர்பின்மை ஏற்படுகின்ற போதிலும் ஒரு குழு இன்னொரு குழு மீது தவறான எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பங்கள் என முரண்பாட்டுக்கான சூழ்நிலைகள் நீட்சி பெறுகின்றன பின்வருவனவற்றுள் முரண்பாட்டு உணர்திறன்மிக்க அறிக்கையிடலுக்கான வழிமுறையாக அமையாதது
  01) முரண்பாட்டு நியாயமானதாகவும் சமநிலை பேணும் வகையிலும் அறிக்கையிடல்
  02) முரண்பாட்டு பின்னணி, காரணங்களை அறிக்கையிடல்
  03) முரண்பாட்டு சூழ்நில்கைளை மனவெழுச்சி நிலைகட்டு உட்பட்ட வகையில் அறிக்கையிடல்
  04) முரண்பாட்டு தாக்கத்தை அறிந்து கொள்ளும் வகையில் அறிக்கையிடல்
  05) முரண்பாட்டு இணக்கப்பாடு தொடர்பிலான முயற்சிகளை அறிக்கையிடல்

**சென்றவாரம் பிரசுரமாகிய க.பொ.த சா/த வினாக்களின் விடைகள்**


01. I. (3,-2)  II. x = 3  02. $\frac{x+2}{x(x+1)}$  03. x
04. 1  05. x = 10  06. 38
07. 9 நாட்கள்  08. $\frac{x-1}{5}$  09. $\frac{16}{9}$  10. r = 2
11. (X -1)  12. I. 180  II. 6
13. 8  14. 10 மனிதர்கள்  15. 36cm
16. 3x - 7  17. 1  18. $(x+3^2) = x^2+6x+9$
19. x = 2  20. 14520/=  21. $\frac{1}{x-y}$
22. I. 48 மனித நாட்கள்  II. 8 மனித நாட்கள்
23. $\frac{2a}{a^2-9}$  24. $\frac{ab}{2}$  25. 20cm  26. $12cm^3$
27. 5km  28. 24xy
29. $\frac{5}{2x}$  30. x = 0 or x = -4  31. $\frac{x^3-x^2\ 3x-3}{x(x^2-1)}$
32. $32a^6$
33. $\frac{x+1}{x-3}$  34. $2\sqrt{7}$  35. 10
36. $\frac{3}{x(2x-3)}$  37. $\frac{a}{b+5}$
38. $\begin{pmatrix} 0 & 2 \\ 0 & 0 \end{pmatrix}$  39. 2 x 3  40. ரூபா 5000
41. ரூபா 3000  42. ரூபா 9  43. y = 5
44. 0.1 x 0.1 = 0.01  45. நட்டம் ரூபா 25
46. $\frac{4}{a} - \frac{3}{a} = \frac{4-3}{a} = \frac{1}{a}$  47. 2080ml  48. $\frac{3}{6}$ or $\frac{1}{2}$
49. 18 நிமிடங்கள்  50. I. 4  II. 8  51. (x+a) (a- a +1)
52. 400.00  53. $s = \frac{v^2-u^2}{2a}$  54. 2
55. ஆரை r = 2  56. I. 500m  II. 0.5cm
57. a = 12  b= 13  c = 14  58. $\frac{1}{10}$  59. x = 8
60. 2.4  61. 24ரூபா  62. x = 4
63. 25 சதுரஅலகுகள்  64. x = -6  65. விட்டம் = 14 அலகுகள்
66. 240L/நிமிடம்  67. 2 (4 - a) (4+a)  68. 1,2  69. 5
70. I. 10  II. 500ml  71. 38.00
72. 1.5kg  73. x = 3x 2 x = 6
74. 101 இரண்டு  75. 9  76. 6x - 2
77. 5  78. 200  79. 2மணி 20நிமிடம்
80. 30L  81. $-\frac{2}{3}$  82. $T_{28} = 3x2^{27}$
83. 7 நாட்கள்

**நேற்றுமுன்தினம் பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்**

(01) 01. தமிழ் வளர்த்தல்  02. செல்வம் / பரிசு  03. (அ) துன்பம் (ஆ) இறைச்சி  04. (அ). செல்வம் (ஆ). இன்பம்  05. யானை  06. (அ) நல்ல + தமிழ் (ஆ) உருவம் + குலைந்து  07. கொடை  08. வறுமை  09. எங்கள் குடும்பத்தின் அவலத்தை எப்படி உரைப்போம்?
(02) 01. கிருஷ்ணன் சதுஜன் 02. இல,15, திருமலை வீதி, மட்டக்களப்பு  03. மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி  04. தரம் - 05  05. தொழில்நுட்பவியலாளர்  06. குடும்பப்பெண்மணி  07. 5  08. கபடி  09. வைத்தியர்
(03) 01. Fish  02. pencil
(04) 01. புத்தாண்டு வாழ்த்துக்கள்  02. தயவு செய்து அமருங்கள்
(05) 01. நாங்கள் பாடசாலைக்குப் போவோம்  02. அண்ணா கடைக்குப் போனார்
(06) 01. பொல் கெடியாக் மில கியத? 02. மம பாடம் கறனவா
(07) 01. 3  02. 2  03. 3  04. 3  05. 2  06. 1  07. 1  08. 4  09. 1  10. 1  11. 3  12. 2  13. 3  14. 2  15. 3  16. 3  17. 4  18. 1  19. 4  20. 3  21. 3 அச்சுக்களை வரைதல்  22. அரியம்  23. முப்பத்தொராயிரத்து எழுபது  24. 11 போத்தல்  25. 9 வயது  26. 47 தடவைகள்
(08) விரும்பிய வசனம்


ஒவ்வொரு வெள்ளிக்கிழமை பிரசுரமாகும் க.பொ.த (சா/த) கணித வினாத்தாளுக்கான விடைகள் யாவும் அடுத்த வெள்ளிக்கிழமை பிரசுரமாகும்

# தேர்தல் களம் 2015



## தமிழ் கூட்டமைப்புக்கு திம்பு கோட்பாடு இப்போது ஏன்?

### கொக்குவில் சந்திப்பில் சொல்லின் செல்வர் கேள்வி



திம்புக் கோப்பாட்டை எதிர்த்த தமிழரசுக் கட்சியின் தலைவர்களுக்கு இப்போது அக் கோட்பாடு ஏன் தேவைப்படுகிறது என வீணைச்சின்னத்தில் இம்முறை தேர்தலை எதிர் கொள்ளும் இரா.செல்வவடிவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொக்குவில் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய சொல்லின் செல்வர் மேலும் தனது உரையில் திம்புக்கோப்பாட்டினை முன்னாள் போராளிக் குழந்தைகளுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியும் சேர்ந்து இந்திய அரசினால் ஏற்க வேண்டிய சூழ் நிலைக்குத் தள்ளப்பட்ட போது அதனை அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி மறுதலித்தது.

அப்போது இருந்த தலைவரான அமிர்தலிங்கம், சிவ சிதம்பரம், சம்பந்தன் ஆகியோர் திம்புக் கோப்பாட்டினை கடுமையாக எதிர்த்தனர்.

சம்பந்தன் மனச்சாட்சியைத் தொட்டு உண்மையைப் பேச வேண்டும் இன்று திடீரென அதனை நீங்கள் வலிறுத்திப் பேசுவது ஏன்?

அதனைத் தருவோம். இதனைப் தருவோம் என்றெல்லாம் கூறுபவர்களைப் பார்த்துக் கேளுங்கள். எதனைப் பெற்றுத் தந்தார்கள் தமிழத்தேசியக் கூட்டமைப்பினர்?வரலாற்றினைப் புரட்டி, மாற்றி திருப்பி எழுதப் பார்க்கிறார்கள் த.தே.கூவினர்

என் இரத்த உறவுகளே நான் உங்களிடம் பொய்களைக் கூற விரும்பவில்லை. செய்த சேவைகளை வைத்துத்தான் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வாக்கு கேட்கின்றது. இந்தப் பொற்பதி வீதி ஆளும் த.தே.கூவினரின் நல்லூர் பிரதேச சபையின் வசம் இருக்கின்றது. 5 வருடங்கள் பிரதேச சபையினை சீரழித்த த.தே. கூட்டமைப்பினர் இந்த வீதிக்குத் தார் ஊற்றினார்களா?

எனது சகோதர, சகோதரிகளே இவர்களா உங்களுக்கு உரிமையைப் பெற்றுத்தரப் போகிறார்கள்?

எமது முதன்மை வேட்பாளர் டக்ளஸ் தேவானந்தா சொல்வதனை எல்லாம் செயலாக்கியவர். எம்முடைய நினைவு, கனவு ஆகியவற்றில் வந்த வடமாகாண சபையினை நன்கு அனுபவிக்கின்றார்கள் த.தே.கூவினர் அவர்கள் ஓடும் வாகனங்கள் ஒவ்வொன்றும் ஜப்பான் நாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டவை கோடிக் கணக்கான பெறுமதியுடையவை இந்தக் கோடிகளில் ஒரு சதத்தினையாவது முன்னாள் போராளிகளின் நலனுக்காக செலவளித்தார்களா? விடுதலைப் போராளிகள் வேண்டாம். அவர்களுடைய வாக்குகள். வேண்டும். எனதருமை மக்களே உங்கள் இரத்தத்தில் கலந்துள்ள தமிழர் உரிமைப் போராட்டத்தில் இணைந்த ஈ.பி.டி.பி.யினராகிய எமக்கு வீணைச்சின்னத்தில் வாக்களித்து உரிமை கோரிக்கைக்கு வலுச்சேருங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சுயநலன்கொண்ட அரசியல் நகர்வுகளை தூக்கி எறியுங்கள்

### ஈ.பி.டி.பி.யின் யாழ்.அமைப்பாளர் குகேந்திரன் வேண்டுகோள்



செல்வநாயகம் காலம் தொடக்கம் இன்று வரை தமிழ் மக்கள் கொண்டுவந்த தீர்வுத்திட்டங்கள் எதுவும் நமக்கு பயனற்றுப் போனதற்கும் ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்டதற்கும் தமிழர்களை தலைமைத்துவம் செய்த தலைவர்களது தற்துணிவற்றதும் தூரநோக்கற்றதுமான அரசியல் நகர்வுகளே காரணம். இந்த தலைமைத்துவத்தை மாற்றியமைத்து ஒரு தூரநோக்குள்ள அரசியற் தலைமையையே இந்த பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் தெரிவுசெய்யவுள்ளனர். அந்த தலைமை எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவாகவே என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான கா.வேலும்மயிலும் குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

தென்மராட்சியில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது -

எமது சின்னமான வீணையை தென்னிலங்கை அரசுகளுக்கு அடகு வைத்துவிட்டோம் என்றும தமிழரது உரிமைகளையும் சிங்களவர்களுடன் சேர்ந்து தடுத்து நிறுத்துகிறோம் என்றும் கூறித் திரிந்தவர்கள் தமிழ் மக்களுக்கு இதுவரை எதனைப்பெற்றுக் கொடுத்துள்ளனர் என சிந்தித்துப்பாருங்கள்? நாங்கள் தமிழ் மக்களது வாழ்வியலை வைத்து ஒருபோதும் அரசியல் நடாத்தியது கிடையாது. அதனால தான் எங்களால் தமிழ் மக்களுக்கு இன்றுவரை சேவைகள் செய்து கொடுக்க முடிந்துள்ளது.

தென்னிலங்கையில் பலம் பொருந்தியிருந்த அரசுகளுடன் ஒரு பங்காளியாக இருந்து வந்ததனால்தான் வடக்கின் அபிவிருத்திகளையும் வறிய மக்களது வாழ்வாதாரங்களையும் கட்டியெழுப்ப முடிந்தது. இதை பலர் பலவாறு விமர்சித்திருந்தனர். அவர்களது தூற்றுதல்களையெல்லாம் கண்டு நாங்களும் ஒதுங்கியிருந்தால் குடாநாட்டின் மக்களது வாழ்வியல் நிலை கேள்விக் குறியானதாகவே மாறியிருக்கும். கடந்தகால குடாநாட்டின் நிலைமைகளை ஒருதரம் சிந்தித்துப்பாருங்கள்.

கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை எல்லாம் கூட்டமைப்பினர் தட்டிக்களித்து வந்தபோதும் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சரிவர பயன்படுத்தி வந்தமையால் தான எமது குடாநாட்டு மக்கள் வாழ்வியலில் மேம்பட முடிந்துள்ளது.

போராட்டத்தில் அசைக்க முடியாத பலங்கொண்டிருந்த புலிகளைக்கூட தவறான அரசியல் நகர்வுகளால் அரசியல் ரீதியில் தோற்கடித்து தமிழரது ஆயுதப் போராட்டத்தையே அடியுடன் அழித்துவிட்டனர் தற்போதும் தேசியம் பேசிக் கொண்டிருப்பவர்கள். இதுவரை தமிழ் மக்கள் கண்ட அழிவுகளுக்கு பொறுப்புக்கூறவேண்டியவர்கள் தற்போதைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர்தான். ஆனால் தற்போது இவற்றையெல்லாம் மறைத்து தமிழ் மக்களை தொடர்ந்தும் முட்டாள்களாக்க முயல்கின்றனர்.

இவர்களது இந்த ஏமாற்று வேலைகளை தமிழ் ம்க்கள் தற்போது புரிந்து கொண்டுள்ளமையால் நிச்சயமாக தமிழர்களது தலைமைத்துவத்தை மாற்றுவதற்கான சந்தர்ப்பம் நெருங்கியுள்ளது. இந்த மாற்றமானது எமது வீணைச் சின்னத்தின் எழுச்சியாக அமைய தமிழ் மக்கள் தீர்ப்பளிப்பார்கள் என நம்புகின்றோம் - என்றார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் – வன்னி)






ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


## உதவிக்கரம் நீட்டுவதில் எப்போதும் முன்னிற்பவர் டக்ளஸ் தேவானந்தா

### விவசாய அபிவிருத்தி சபை தலைவர் புகழாரம்

வன்னி இறுதிப்போரில் உயிர் உடமை இழப்புக்களை எதிர்கொண்ட மக்களுக்கு விரைந்து உதவிக் கரம் கொடுத்தவர் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே என வலி.கிழக்கு விவசாய அபிவிருத்தி சபையின் தலைவர் அ.தம்பிநாதன் தெரிவித்தார்.

அச்சுவேலி தெற்கில் இடம் பெயர்வுக்குள்ளான பொது மக்களுடனான சந்திப்பொன்றில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இம் மக்களுக்காக வலிகாமம் கிழக்கில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியால் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட உதவித திட்டங்களை நினைவு கூர்ந்து உரையாற்றிய தலைவர் தம்பிநாதன் மேலும் தனது உரையில்

கல்வி, பொருளாதாரம், வாழ்வாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்காகவே திட்டங்களை எப்போதும் முன்னிலைப்படுத்தும் முன்னாள் அமைச்சரிடம் நன்மைகளை பெற்றுக்கொண்ட மக்கள் அவரை ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

வீதி அபிவிருத்தியிலிருந்து சுயதொழில் ஊக்குவிப்பு கல்வியை மேம்படுத்துவதற்கான இவரது முயற்சிகள் வரை அனைத்து திட்டங்களையும் பெரும் எண்ணிக்கையான மக்கள் அவரிடம் நன்மைகளைப் பெற்றுள்ளனர்.

இயற்கையின் பாதிப்பால் விவசாயிகள் தமது வங்கிக் கடன்களைச் செலுத்த முடியாது தவித்த போது, இந்தக் கடன்களை இரத்துச் செய்து விவசாயிகளுக்கு உதவவேண்டுமென அரசாங்கத்துடன் வாதாடியவர் எமது டக்ளஸ் தேவானந்தா.

அவர் எப்போதும் எங்களுடனேயே இருப்பார் சந்தர்ப்பம் கிட்டும் போதெல்லாம் அவர் மூலம் கிடைக்கக் கூடிய அனைத்து உதவிகள் நிச்சயம் கிட்டும்.

இம்முறை தமது சொந்தச் சின்னமாகிய வீணைச் சின்னத்தில் களமிறங்கியுள்ள ஈழ மக்கள் ஜனநாயக கட்சியை அதி கூடுதல் வாக்குளால் வெற்றி பெற நாம் அனைவரும் எமது ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (168)


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில்
போட்டியிடும் ஈ.பி.டி.பி. வேட்பாளர்களை
வெற்றி பெறச் செய்வோம்!
X 4
சில்வேஸ்திரி அலென்ரின்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
8
ஐயாத்துரை ஶ்ரீரங்கேஸ்வரன்
(வடமராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
1
டக்ளஸ் தேவானந்தா
(செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி.)
முதன்மை வேட்பாளர்
இராமநாதன் ஐங்கரன்
(வலிகாமம் கிழக்கு ஈ.பி.டி.பி. இண்ணப்பாளர்)
2
முருகேசு சந்திரகுமார்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
7
பசுபதி சீவரத்தினம்
(ஈ.பி.டி.பி. தேசிய அமைப்பாளர்)
6
'சொல்லின் செல்வர'
இரா.செல்வவடிவேல்
3
சிவகுரு பாலகிருஸ்ணன்
(வலிகாமம் மேற்கு ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
9
திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா
(யாழ்.மாநகர முன்னாள் முதல்வர்)
5
சூசைமுத்து அலெக்ஸாண்டர்
(தென்மராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)
10
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

## உள்ளக...

தெரிவித்துள்ளது. அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன இதனைத் தெரிவித்தார்.

ஜெனீவாவில் எதிர்வரும் செப்ரம்பரில் இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை வெளிவரவிருக்கிறது. இந்த நிலையில் அதற்கு முன்னர் உள்ளகப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

அதன்படி உள்ளகப் பொறிமுறை எப்போது உருவாக்கப்படும் என்று ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் வினவினர். அதற்கு பதிலளித்த அவர், குறித்த விசாரணை அறிக்கை வெளிவருவதற்கு முன்னர் எந்தவித பொறிமுறையும் அறிமுகப்படுத்தப்பட மாட்டாதென பதிலளித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும் விடயங்களைப் பார்த்த பின்னரே இது குறித்து நடவடிக்கை எடுப்போம். செப்ரம்பரில் உள்ளக பொறிமுறையை நடைமுறைப்படுத்துவோம் என்றார். இதேவேளை உள்ளகப் பொறிமுறை தொடர்பில் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கருத்து வெளியிட்டுவருவது குறித்து விடயங்களை முன்வைத்த ஊடகவியலாளர்கள், இது குறித்து அமைச்சரின் நிலைப்பாட்டை வினவினர்.

இதற்கு பதிலளித்த அவர், உள்ளகப் பொறிமுறையை எவ்வாறு பயங்கர நடவடிக்கை எனக் கூறமுடியும்? கடந்த அரசாங்கமே சர்வதேச ஆலோசகர்களை கொண்டுவந்தனர். அத்துடன் தருஸ்பன் தலைமையிலான குழுவுக்கு இணக்கத்தை வெளியிட்டிருந்ததும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கமே. அவர்களே கேட்டு வாங்கிக்கொண்டனர்.

கடந்த அரசாங்கமே இந்த நாட்டை சர்வதேசத்தின் முன்னிலையில் நெருக்கடியை சந்திக்கச் செய்தது என்றார். அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து தன்னை விலக்கியதாக கூறும் எந்தவொரு கடிதமும் இதுவரை கிடைக்கவில்லை என அமைச்சர்வைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அமைச்சர் ராஜித சேனாரத்ன, அர்ஜுன ரணதுங்க உள்ளிட்ட ஐவர் நீக்கப்பட்டுள்ளதாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், கட்சி உறுப்புரிமையிலிருந்து விலக்கியதாக கூறப்படும் எந்தவொரு கடிதமும் கிடைக்கப்பெறவில்லை என பதிலளித்தார். அத்துடன் கட்சியிலிருந்து விலக்கினாலும், இல்லையென்றாலும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிடுவதாக அவர் கூறினார்.

இதேவேளை நேற்று புதன்கிழமை இரவு இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தபோது இந்த விடயம் குறித்து ஜனாதிபதிக்கும் தனக்கும் சிறிய கலந்துரையாடல் இடம்பெற்றதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## ஜே.வி.பி..

ரச்சியை பொலிஸார் கைது செய்துள்ளனர். சிலாபம் அரச வைத்திய சாலையினுள் அத்துமீறி நுழைந்து தேர்தல் தொடர்பிலான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



செ.ஸ்ரீராமச்சந்திரதாஸ்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

## மன்னார் புதைகுழி விவகாரம்

# மரபணு பகுப்பாய்வு திடீர் இடைநிறுத்தம்

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வர பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளை மேலதிக பகுப்பாய்வு செய்து அறிக்கைகளை மன்றில் சமர்ப்பிப்பதற்கு சுமார் 27 ஆயிரம் அமெரிக்க டொலர் தேவைப்படுவதால் அதை நிறுத்திவைக்குமாறு கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினர் மன்றில் தெரிவித்தனர்.

கடந்த 2013 ஆம் ஆண்டு மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் இருந்து குடிதண்ணீர் வழங்குவதற்காக வீதி ஓரத்தில் குழாய் பதிப்பதற்காக குழி வெட்டப்பட்டபோது மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதை தொடர்ந்து முன்னாள் மன்னார் நீதிபதி ஆனந்தி கனகரெட்ணம் முன்னிலையில் சட்டவைத்திய அதிகாரி வைத்திய ரெட்ண தலைமையில் அகழ்வுப் பணி இடம்பெற்றபோது 83 மனித மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டு பகுப்பாய்விற்கு அனுப்பபட்டிருந்ததுடன் அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதை தொடர்ந்து அங்கிருக்கும் கிணற்றிலும் வேறு இடங்களிலும் காணாமற்போனவர்களின் எச்சங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் காணமற்போனோர் சார்பாக மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று மன்னார் மாவட்ட நீதிவான் நீதமன்ற நீதிபதி ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது காணாமற்போனோர் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி வீ.எஸ்.நிரஞ்சன் தலைமையில் சட்டத்தரணிகள், எம்.எம்.சபூர்தீன், திருமதி. ரணித்தா ஞானராஜா, ஜெபநேசன் லோகூ ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் - இதுவரைக்கும் தங்களுக்கு பொதுமக்களிடம் இருந்து காணாமற்போனவர்கள் தொடர்பாக எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேநேரத்தில் காணாமல்போனோர் சார்பாக சட்டத்தரணிகள் வீ.எஸ்.நிரஞ்சன் தனது சட்டவாதத்தை முன்வைக்கையில் - நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மன்னார் நில அளவை படத்தில் 128 ஆவது பகுதியில் ஏற்கனவே கல்கிணறும் கூட்டுறவு சங்க களஞ்சியமும் பயணிகள் தங்குமிடமும் இருந்தன என சுட்டிகாட்டப்பட்டது.

## இலவச...

இக்கட்டான நிலைகளும் குறைபாடுகளும் எதிர்ப்படுகின்றன. தற்போது 232,828 குடும்பங்கள் (796,342 நபர்கள்) வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

குறித்த மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களில் பெரும்பாலான மக்கள் தமக்குரிய மின் இணைப்புக்களை பெற முடியாத நிலையில் இருக்கின்றனர்.

எனவே வட மாகாணத்தில் மீள்குடியேற்றப்பட்ட 20,000 குடும்பங்களுக்காவது இலவச மின் இணைப்பை பெற்றுக் கொடுப்பதற்கும், 2015 ஆம் ஆண்டில் மீள் குடியேற்றப்பட்ட 5,000 குடும்பங்களுக்கு இலவசமாக வீட்டு மின் வழங்கல் இணைப்பை ஏற்பாடு செய்வதற்காக 105 மில்லியன் ரூபாவினை வழங்குவதற்கும் மின் வலு மற்றும் வலு சக்தி அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க மற்றும் மீள்குடியேற்றம், புனர் நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோரினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## இந்தியா...

விரத்னவுக்குப் பதிலாக, எசல வீரக்கோன் நியமிக்கப்பட்டு, அவரை தூதுவராக புதுடெல்லி ஏற்றுக்கொண்டுள்ளது.

இவர் விரைவில் புதுடெல்லியில் தமது பதவியைப் பொறுப்பேற்பார் என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். எசல வீரக்கோன் சிறிலங்கா வெளிவிவகாரச் சேவையைச் சேர்ந்த ஒரு மூத்த இராஜதந்திரியாவார்.

இவர் முன்னர், அமெரிக்கா மற்றும் அவுஸ்ரேலியாவில் துணைத் தூதுவராகவும், நோர்வேக்கான தூதுவராகவும் பணியாற்றியுள்ளார்.

அதேவேளை, வெளிவிவகாரச் சேவையை சேர்ந்த, அருணி ரணராஜா பிலிப்பைன்சுக்கான தூதுவராகவும், கலாநிதி சமன் வீரசிங்க ரஸ்யாவுக்கான தூதுவராகவும் பதவியேற்கவுள்ளதாகவும், வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

## இன...

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த காலங்களில் தென்னிலங்கை அரசுகள் மாற்றாந்தாய் போக்குடன் தான் தமிழ் மக்களை நோக்கியிருந்தனர்.

காலமாற்றத்தில் இந்நிலை மாற்றம் பெற்றிருந்த சூழலில் ஆளும் அரசுடன் நல்லுறவை ஏற்படுத்தி அதனூடாக எமது மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து பலப்படுத்த வேண்டியது அவசியமான தேவைப்பாடாக இருந்தது.

இதனடிப்படையில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடான 13 ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண வேண்டுமென்று நாம் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றோம்

இந்நிலையில் இந்நாட்டில் நிரந்தர சமதானத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் இனங்களுக்கிடையே நல்லுறவையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த வேண்டியது அவசியமானதென்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர்களான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), ஐங்கரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## சமஷ்டி...

ஆட்சி மாறியதாக கூறுகிறீர்கள். அப்படியானால் மக்களின் உரிமைகளைப் பெற நிபந்தனை விதித்திருக்கலாம். நிகழ்ச்சி நிரலில் செயற்படுகின்றனர்.

சர்வதேச விசாரணை கோரப்பட்டுவந்த போதிலும் ஆட்சி மாற்றத்தின் மூலம் அது நேர்மையான முறையில் இடம்பெறும் என்றார்கள். ஆனால் இப்போது உள்ளக விசாரணை மேற்கொள்ளக் கோரிய நிலையில் அதற்கும் பூரண சம்மதம் கூறுகிறார்கள்.

ஒற்றையாட்சி தான் என்பதை வலியுறுத்தி வாக்கு திரட்டும் தென்பகுதி சிங்களத் தலைவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சமஷ்டிக்கு இவர்கள் சம்பதிப்பார்களா? ஐந்து ஆண்டுகளான போதும் இருந்தவர்கள் ஒற்றையாட்சிக்குள் இருக்கும் 13 ஆம் திருத்தம், மாகாண சபை அதிகாரம் எனத் தெரிவித்தார்கள். இப்போது தேர்தலுக்காக சமஷ்டி என்கிறார்கள்.

எமது மக்களுக்கு அப்பட்டமான பொய்களைக் கூறி வாக்குகளை கூட்டமைப்பினர் பெறுகின்றமையை தமிழ் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

உள்ளக விசாரணை மூலம் முடக்கி தமிழ் மக்களுக்கான பொறுப்புக் கூறலை அடியோடு இல்லாமற்செய்தமைக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே பொறுப்புக்கூறவேண்டும்.

தமிழ்த்தேசிய மக்களுக்கு விசுவாசமாக இருங்கள். சர்வதேச சமூகம் தங்களுடைய நலனைத்தான் கருத்தில் கொள்வார்கள். எங்கள் நலனில் அக்கறை கொள்வார்கள என்று நம்புவது முட்டாள்த்தனம்.

கூட்டமைப்பினர் தமிழ் மக்களை முட்டாள்கள் என நினைக்கின்றார்கள். கடந்த 5 வருடமாக செய்த மாதிரி தொடர்ந்து செய்யலாம். தொடர்ந்து மக்களை ஏமாற்றலாம் என நினைக்கிறார்கள். போராட்டத்தை நேசிப்பது என கூறுவது அப்பட்டமான பொய். சம்பந்தர் திருகோணமலையில் கூறியிருக்கிறார் புலிகளின் தலைவர் மீது தனக்கு தனிப்பட்ட பாசம் இருக்கிறது என்று. மாகாண சபைத் தேர்தலின்போதும் இதைத்தான் சொல்லி மக்களை ஏமாற்றினார்கள்.

பிரபாகரனை மாவீரன் என்றார்கள். 30 ஆசனங்களை கொடுத்தால் மாவீரன் இல்லங்களை புனரமைப்போம், இராணுவத்தை வடக்கில் இருந்து வெளியே அனுப்புவோம் என்றார்கள். தேர்தலுக்கு அடுத்தநாள் கொழும்பில் போய் பத்திரிகையாளர் மாநாடு வைத்துக் கூறுகிறார் புலிகள் தீவிரப்போக்குடையவர்கள், ஈவிரக்கமற்ற பயங்கர வாதிகள் என்றார்.

எத்தனை காலமாக இவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றப்போகிறார்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும். இந்தத் தேர்தல் மூலம் அதனை மக்கள் முடிவு செய்யவேண்டும். இந்தத் தேர்தலில் அதனை மக்கள் தமது வாக்களிப்பின் மூலம் வெளிக்காட்டவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ,25)

# யாழ். மக்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த எப்போதும் தயார்

## பொலிஸ் பொறுப்பதிகாரி சொல்கிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸார் எப்போதும் தயாராக இருப்பதாக யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யு.கே.வூட்லர் தெரிவித்துள்ளார்.

திருக்குடும்ப கன்னியர் மடத்தில் இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோகத்திலிருந்து பிள்ளைகளை பாதுகாப்பது தொடர்பிலான விழிப்புணர்வு கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

நான் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்து இரண்டு மாதங்கள் கடந்து விட்டன. குறித்த காலப்பகுதியில் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பலருடன் கலந்துரையாடியுள்ளேன்.

அதனூடாக இங்குள்ள பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டதுடன் ஆயிரக்கணக்கிலான முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்த நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கு அரச சட்டக்கோவை உள்ளது. அந்தவகையில் அரச உத்தியோகத்தர் என்ற வகையில் எனது கடமையை செய்ய நான் தயாரர்க உள்ளேன்.

அதேபோல நீங்கள் உங்களுடைய கடமையை சரிவரச் செய்ய வேண்டும்.

இங்கு பாலியல் துஷ்பிரயோகம், போதைப்பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத செயல்கள் என்பன அதிகரித்துக் காணப்பட்டமையினால் அவற்றில் இருந்து யாழ்ப்பாண மக்களை பாதுகாக்க நான் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டேன்.

அவற்றில் ஒரு அங்கம் தான் உங்களை நான் சந்தித்து கலந்துரையாடுவதும் அத்துடன் ஒவ்வொரு நாளும் மாலை 5 மணிக்கு பின்னர் நகரிலும் மற்றும் வீதிகளிலும் கூடும் மாணவர்களை இனங்கண்டு வீட்டுக்கு அனுப்பிவைக்கும் நடைமுறையை ஏற்படுத்தியுள்ளேன்.

பாடசாலைகளுக்கு அருகில் பெட்டிக்கடைகள் மற்றும் ஐஸ்கிறீம் கடைகள் என்பனவற்றினை அகற்றுமாறு கோரியுள்ளேன். ஏனெனில் குறித்த விற்பனை நிலையங்களிலேயே போதைப்பொருள்கள் மாணவர்களுக்கு விநியோகம் செய்யப்படுவதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றது

மேலும் பெற்றோர்களாகிய நீங்கள் பிள்ளைகள் பாடசாலைக்கு கொண்டு செல்லும் புத்தகப்பை மற்றும் அவர்கள் பயன்படுத்தும் தொலைபேசி என்பனவற்றை சோதித்து பார்க்க வேண்டும்

ஏனெனில் பாடசாலைக்கு செல்வதாக கூறி செல்லும் பிள்ளைகளின் புத்தகப் பையில் சிவில் உடைகளையும் எடுத்துச் செல்கின்றனர்.

வீட்டில் இருந்து வந்து தங்களது பாடசாலை சீருடைகளை மாற்றி விட்டு சிவில் உடையில் வெளியில் திரிகின்றனர். இவ்வாறான சம்பவங்களையும் நாங்கள் யாழ்ப்பாணத்தில் கண்டுள்ளோம்.

அத்துடன் பிள்ளைகளுக்கு தொலைபேசிகள், இணையத்தள வசதிகள் உள்ளிட்டவற்றை பெற்றுக் கொடுக்கிறீர்கள். ஆனால அது பிழையில்லை. எனினும் பிள்ளைகளைக் கவனிக்க பெற்றோருக்கு நேரம் போதாதுள்ளமையே தவறு.

எனவே பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளின் எதிர காலத்தை கவனத்தில் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதேபோல மாணவர்களும் தங்களுடைய எதிர்காலத்தை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல கல்வியில் ஆர்வம் காட்ட வேண்டும் என்றும் தெரிவித்தார்.




2014ஆம் ஆண்டின் சிறந்த ஊடகவியலாளருக்கான விருது வழங்கும் விழா நேற்று கல்கிஸை மவுண்ட்லவினியா விடுதியில் இடம்பெற்றபோது....

# தேசியக் கொடி விவகாரம் பிரதேச சபைத் தலைவர் கைது.

(கொழும்பு)



யட்டிநுவர பிரதேச சபையின் தலைவர் துஷித குமார வெலகெதர, கடுகன்னாவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடுகன்னாவை அபேசுந்தர விளையாட்டரங்கில் அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில், தேசியக் கொடிக்கு ஒத்த தோர், சிங்கம் மட்டுமே பொறிக்கப்பட்டு சிறுபான்மை பிரதிநிதித்துவ நிறங்கள் அப்புறப்படுத்தப்பட்ட கொடிகளை ஏற்றியிருந்தமை தொடர்பிலான குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், கண்டி மாஜிஸ்திரேட் நீதிமன்றில் இவர் நேற்று ஆஜர் செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# இராணுவ மரியாதையுடன் கலாமின் புகழுடல் நல்லடக்கம்

(சென்னை)



இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் உடல் அவர் வீட்டிலிருந்து இராணுவ வாகனத்தில் இராணுவ வீரர்களின் அணி வகுப்புடன் நகரின் முக்கிய தெருக்கள் வழியாக வந்து ராமேஸ்வரம் தீவின் தங்கச்சிமடத்தில் உள்ள பேய்க்கரும்பு என்னும் இடத்தில் முழு இராணுவ மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. முப்படை வீரர்களும் அணிவகுத்துச் சென்று அவரது உடலுக்கு மரியாதை செலுத்தினர்.

இறுதி நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைசசர்கள் பொன் ராதாகிருஷ்ணன், வெங்கய்ய நாயுடு, மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர், தமிழக ஆளுநர் ரோசய்யா, கேரள மாநில ஆளுநர் சதாசிவம், கேரள முதல்வர் உம்மன் சாண்டி, முன்னாள் முதல்வர் அச்சுதானந்தன், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி, முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரவு, தமிழக அரசியல் கட்சித் தல்லவர்களான திருமாவளவன், பா.ஜ.க. மாநில தலைவர் தமிழிசை சௌந்தர்ராஜன், தேசிய செயலாளர் எச்.ராஜா, கட்சியின் மாநில துணைத் தலைவர் நாகராஜ், சு.குப்புராமு, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், முன்னாள் அமைச்சர் குலாம்நபி ஆசாத், ராமநாதபுர மக்கள் தலைவர்கள் அன்வர் ராஜா, ஜவாகிர் உல்லா, உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு கலாம் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கலாமுடம் பணிபுரிந்த நண்பர்கள், குடும்பத்தினர், கலாமின் அறிவியல் ஆலோசகர் பொன் ராஜ் உள்ளிட்ட பலரும் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். தமிழக அமைச்சர்கள் ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் நத்தம் விஸ்வநாதன், எடப்பாடி பழனிச்சாமி, சுந்தர்ராஜன், உதயகுமார், உள்ளிட்ட அமைச்சர்களும் அஞ்சலி செலுத்தினர்.

இஸ்லாமிய முறைப்புடி இறுதிச் சடங்குகள் செய்யப்பட்ட பிறகு முப்படை வீரர்கள் 21 குண்டுகள் முழங்க அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. முன்னதாக ஊர்வலம் வந்த பாதை முழுவதும் ஏராளமான பொதுமக்கள் நீண்ட நேரம் வரிசையாக காத்திருந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# கட்சி தாவல்

(யாழ். நிருபர்)

காரைநகர் பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டுள்ளார்.

தனது சொந்த விருப்பத்தின் பேரிலேயே அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நீங்கி கூட்டமைப்புடன் இணைந்து கொள்வதாகவும், இது தொடர்பில் ஐ.தே.க. தலைமைக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

# தேர்தல் சுவரொட்டியுடன் இருவர் கைது

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறைப் பகுதியில் அரசியல் கட்சியொன்றின் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த இருவர் நேற்று வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறைப் பகுதியில் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்தபோது நேற்றுக் காலை 5.00 மணியளவிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெல்லியடி மற்றும் இளவாலைப் பகுதிகளைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர் என வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எஸ். நாடின் தெரிவித்துள்ளார்.

# சோபித தேரருடன் சந்திரிகா பிரசாரப்போர்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பொதுத் தேர்தலையொட்டிய எந்தவொரு அரசியல் கட்சியின் மேடைகளிலும் ஏறப் போவதில்லை என அவருக்கு நெருங்கிய தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

சந்திரிகா, லண்டனில் இருந்து திரும்பிய கையோடு நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்துவார் எனவும், ஐக்கிய தேசிய முன்னணி மேடைகளில் ஏறி கம்பஹா மாவட்ட பொதுத் தேர்தல் வேட்பாளர் அர்ஜுன ரணதுங்கவுக்கு ஆதரவாக பிரசாரம் செய்வார் எனவும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மாதுலுவாவே சோபித தேரர் தலைமையிலான மக்கள் அமைப்பு உட்பட்ட தொழிற்சங்க ஒன்றியத்தின் மேடைகளில் மட்டும் உரையாற்றுவதற்கு சந்திரிகா உடன்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

# மென்பந்து கிரிக்கெட் புங்குடுதீவில் இன்று இறுதி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பாரதி விளையாட்டுக்கழகத்தினால் தீவக அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 3.00 மணியளவில் புங்குடுதீவு பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அணிக்கு 11 பேர் கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் 10 ஓவர்களைக்கொண்டதாக நடைபெறவுள்ளது. இதில் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி அணிகள் மோதவுள்ளன. இப்போட்டித் தொடரின் முதல் சுற்று முதல் அரையிறுதி ஆட்டங்கள் வரை கடந்த ஒரு வாரங்களாக புங்குடுதீவு பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இதில் தீகவகத்தைச் சேர்ந்த முன்னணி அணிகள் பல பங்குகொண்டன. (21)

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 31ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.